உ
குருபாதம்
# ஞானசம்பந்தம்

மலர் 37 | காளயுக்தி – ஆனி – 10—7—78 | இதழ் 8

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. — சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## 'மீண்டும் சில வேண்டுகோள்"

**ஊதிய சங்கு:**

விண்முட்டும் கோபுரங்களும், வியப்பூட்டும் சிற்பங்களும் நிறைந்து உலகவர்களை ஈர்க்கும் தமிழகத் திருக்கோயில்களும், இவற்றைப் பராமரித்து வரும் திருமடங்களும், எல்லாம் இருந்தும் இல்லாத நிலையில், சக்கரங்கள் இல்லாத தேர்கள் போல ஊர்ந்து வருகின்றன. இந்நிலைமை குறித்துப் பல்வேறு விளக்கங்களை "ஞானசம்பந்தம்" பல முறை வெளியிட்டு மக்களுக்கும் அரசுக்கும் அறநிலையங்களின் துயர நிலையை விளக்கி வந்திருக்கிறது. என்றாலும் எவ்வித முன்னேற்றமும் இதுவரை ஏற்பட்டபாடில்லை. தற்காலத்தில் அறநிலையங்கள் தாங்கி நிற்கும் துயரங்களையும் அத்துயரங்களுக்குக் காரணங்களான சக்திகளையும் விளக்கித் "தினமலர்" நாளிதழில் வெளிவந்த கட்டுரை ஒன்றையும், எல்லாவற்றையும் உணர்ந்திருந்தும் பரிகாரம் வழங்குவதில் விரைந்து செயற்படத் தயங்கும் அரசின் போக்கையும் அறிந்துகொள்ளத்தக்க இரண்டு பேட்டிகளையும் தெய்வபக்திமிக்க நல்லோர்களின் சிந்தனைக்காக இவ்விதழில் வெவ்வேறு பக்கங்களில் வெளியிட்டிருக்கிறோம்.

**புரியாத புதிர்:**

நிலவருவாயையே பெரிதும் சார்ந்திருக்கும் தஞ்சைமாவட்டத்துப் பெருங்கோயில்களின் நிலைமையினை நன்கு உணர்ந்திருக்கின்றார்

அறநிலைய அமைச்சர் என்பதனைத் தஞ்சாவூரில் அண்மையில் அவர் நிருபர்களிடையே பேசிய பேச்சு எடுத்துக் காட்டுகிறது.

"கடந்த 25 ஆண்டுகளாக அநேக நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் அமுல் படுத்தப்பட்டிருக்கின்றன. துர்திஷ்ட வசமாக ஏற்படுத்தப்பட்ட நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் ஆலயத்தின் முன்னேற்றத்தைப் பாழ்படுத்திவிட்டன. அகிலஇந்திய அண்ணு தி. மு. க. அரசைப் பொறுத்தவரையில், புராதன நினைவுச் சின்னங்களான இந்த ஆலயங்களைப் பாதுகாப்பதில் அக்கறை கொண்டிருக்கின்றது. ஆனல், இதை எப்படிச்செய்வது என்பது தான் இன்றுள்ள பிரச்சனை. நல்ல நோக்கத்தில் எந்தக் காரியம் செய்தாலும், இப்போது அதற்கு அரசியல் சாயம் பூசப்படுகிறது. பாழடைந்துவரும் ஆலயங்களை எப்படிப் பாதுகாப்பதென்பதே இப்போதுள்ள பிரச்சனை".

அறநிலைய அமைச்சர் மாண்புமிகு. திரு. R. M. வீரப்பன் அவர்களின் நல்லெண்ணத்திலும், திருக்கோயில்கள் சிறந்தமுறையில் விளங்கவேண்டுமென்ற முயற்சியிலும் நமக்கு எவ்விதமான ஐயமும் இல்லை. 25 ஆண்டுகளாக இயற்றப்பட்டுவந்த நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் அறநிலைய வளர்ச்சியை அடியோடு தடுத்துவிட்டன என்பதை உணரும் ஒரு நல்ல அரசு, சட்டத்தை மாற்றியமைக்கும் பெரும் பான்மை பலத்தைப்பெற்றிருந்தும் அதனை விரைந்துசெய்யத் தயங்குவதை நல்லுள்ளம் கொண்டோரால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஒரு பிழையை பிழை என்று உணர்ந்தபிறகும், அதைத் திருத்திக் கொள்ளும் வாய்ப்பிருந்தும் திருத்திக்கொள்ளக் காலம் தாழ்த்துவது மேலும்மேலும் பல பிழைகள் நிகழ வாய்ப்பளித்துவிடும் என அஞ்ச வேண்டியிருக்கிறது.

**விலக்களிக்கவேண்டும் :**

ஆலய நிதியைத் தவருகப் பயன்படுத்துதல்-பினுமி நடவடிக்கைகளால் அறநிலைய வருவாயை மறைத்தல் இவைபோன்ற தவறுகள் சட்டத்தில் உள்ள குறைகளால்தான் உண்டாகின்றன. தீய செயல் புரிபவர்கள் சுயநலங்கருதிச் சட்டத்திலுள்ள குறைகளை அனுகூலமாகப் பயன்படுத்திக்கொண்டு, ஆலயங்களுக்கு நஷ்டம் ஏற்படுத்தித் தாங்கள் லாபம் அடைகிருர்கள். இந்தச் சட்டக் குறைகளை அப் போதைக்கப்போது நிவர்த்திசெய்து, சட்டபூர்வ நடவடிக்கைகளால் சுயநலமிகளிடமிருந்து ஆலயத்தின் சொத்துக்களைக் காப்பாற்ற வேண்டும். சுயநலமிகளைப் பக்திப் பிரசாரத்தால் ஒரு அளவுதான் மனமாற்றமடையச்செய்ய இயலும். அது இப்போது நடந்துவருகிறது. இதர நாடுகளைப்போல் பலவித தவறுகள் ஏராளமாக நம்நாட்டில் நடவாமைக்குச் சான்ருேர்கள் செய்துவரும் பிரசாரமும், வாழ்ந்து காட்டும் வாழ்க்கை நெறிகளுமே காரணங்களாகும். சட்டங்களில்

உள்ள குறைகளை உடனுக்குடன் நீக்கி, சட்டபூர்வ நடவடிக்கைகளை அப்போதைக்கப்போது தீவிரமாக மேற்கொண்டால் நியாயவிரோதச் செயல்களுக்கு இடமின்றிப்போகும். இப்போதுள்ள பெருங்குறை ஆலயங்களுக்கு அளக்கவேண்டிய பாக்கிக் குத்தகையை நேர்மையுடன் அளக்க நினைப்பவர்கள்கூடச் சமாதானம் சொல்லும்படி ஆக்கப்பட்டுள்ள - காலக்கெடுகொடுக்கும் சட்டங்களே. குத்தகை பாக்கிகளை வசூலிக்கத் தடைசெய்யும் அந்தச் சட்டங்களிலிருந்து ஆலயங்களுக்கும் அறநிலையங்களுக்கும் விலக்களிக்கவேண்டும்.

### அவசியமும் அவசரமும்:

இந்து சமய அறநிலைய வளர்ச்சியில் தமக்கிருக்கும் நாட்டத்தை முதலமைச்சர் அவர்களும், அறநிலையத்துறை அமைச்சர் அவர்களும் பலவாறு அறிவித்திருப்பது, மக்களுக்குப் பெரும் நம்பிக்கை யூட்டுவதாக விளங்குவது உண்மையாகும். ஆனால் புதிய அரசு பதவியேற்று ஓராண்டு கடந்துவிட்டபின்னும் எந்த ஒரு அறிவிப்பும் செயல் வடிவம் பெற்று அறநிலையங்களின் துயர் துடைக்கவில்லை என்பது பெரிதும் ஏமாற்றத்தைத் தருகிறது. அவசர உணர்ச்சி ஆகாது என்றாலும், அளவுக்குமீறிய தாமதம் நல்ல அரசுக்கு உதவாது என்பதனைத் திருவள்ளுவரும்,

> "தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
> தூங்காது செய்யும் வினை"

என அழுத்தந்திருத்தமாகக் கூறியுள்ளார். அறநிலையங்களின் நிலங்களிலிருந்து அவற்றிற்குக்கிடைக்கவேண்டிய உரிய வருவாயை உறுதி செய்வதில் அரசு இனியும் தூங்கிச் செயற்படுவது அறமாகாது. வீடு பற்றியெரியும்போது விரைந்து தீயை அணைப்பதே நல்லோர் கடமை. வீடு தீப்பற்றி எரியக் காரணமானவர்களை அடுத்துக் கவனிக்கலாம். தீயை நாம் அணைத்தால் ஊர் என்ன சொல்லும், உலகம் என்ன பேசும் என்றெல்லாம் கவலைப்பட வேண்டுவதில்லை. நல்லதைச்செய்யும்போது, மற்றவர்கள் என்ன நினைப்பார்கள், பேசுவார்கள் என்று கவலைப்பட நியாயமில்லை. நன்மை தரும் முயற்சிகளை எதிர்ப்பவர்கள் தன்னலவாதிகளாகவே இருப்பர் என்பதை உலகம் அறியும். எனவே, அறநிலையங்களின் வருமானத்தை உறுதி செய்ய அரசு மேற்கொள்ளும் முயற்சிகளுக்குச் சிலர் அரசியல் சாயம் பூச முயல்கின்றனர் என்ற அச்சம் அமைச்சர் அவர்களுக்குச் சிறிதும் வேண்டுவதில்லை. அறநிலையங்களின் நலம் குறித்து அரசு எடுக்கும் நியாயமான நடவடிக்கைகளுக்கு, பக்தியும் பண்பாடுங்கொண்ட பல லட்சம் நன்மக்களின் தார்மீக ஆதரவு நிறைவாக உண்டு என்பதை நன்கு உணர்ந்து அரசு விரைந்து செயல்பட வேண்டுவது அவசியமும் அவசரமும் ஆகும்.

**வேண்டுவன யாவை ?**

தமிழ்நாட்டின் பண்பாட்டிற்கும், கலைவளத்திற்கும் சான்றுகூறி நின்று, உலகவர்களை எல்லாம் கண்களிக்கச்செய்யும் இந்நாட்டுத் திருக்கோயில்களுக்குத் தமிழக அரசிடம் இருந்து நாம் மானியங்கள் கோரவில்லை. உதவித்தொகை வழங்க வேண்டவில்லை. கோயில்கள் செம்மைபெற நடைபெற்றுவரவேண்டும் என்று, அறநெஞ்சத்தோடு தங்கள் நிலங்களையும், உடைமைகளையும் வழங்கினர்களே அந்த மூதாதையர்களின் அறங்களை அழித்துவிடாமல் பாதுகாத்து உதவுங்கள் என்று அரசிடம் வேண்டுகின்றோம். கோயில்களுக்கு உரிய நிலங்கள் உழவர்களிடம் இருக்கக்கூடாது என்பது அல்ல நமது நோக்கம். உழுது பயிரிட்டுத் தாங்கள் வாழ்வதோடு, தங்கள் வாழ்வுக்கு வழிவகுத்த திருக்கோயில்களையும் வளப்படுத்தி, அதனால் பல லக்ஷம் ஏழைக் குடிகளை வாழவைக்கவேண்டுமென்று அவ்வுழவர் பெருமக்களுக்கு அரசு உரியவகை அறிவுரை கூறவேண்டுமென்பதே நமது வேண்டுகோள். கோயில்களைப் பாதுகாத்து உதவுங்கள் என்று நாம் வேண்டுவது இறைவனுக்குச் சிறப்புச்செய்வதற்காகமட்டும் அல்ல; இறைவனுடைய திருக்கோயில்களில் பணியாற்றும் இலக்ஷக் கணக்கான குடும்பங்களில் எரியும் அடுப்பினை அவிந்துவிடாது பாதுகாத்துக்கொடுங்கள் என்பதற்காகவும்தான். இதுவே நமது சிறந்த கோரிக்கை.

**தெருவில் தீர்ப்பதல்ல :**

வேறு ஒன்றையும் இந்தநேரத்தில் சொல்லிக்கொள்வது நமது கடமையாகிறது.

> " நாட்டிலுள்ள ஆஸ்திக சமாஜங்களும், இதர சமயஸ்தாபனங்களும், கிருபானந்த வாரியார் போன்ற பிரமுகர்களும் எந்த அளவிற்குப் பக்தியைப் பிரசாரம் செய்வதில் ஆர்வம் காட்டுகிறார்களோ, அதே அளவிற்கு, ஆலய நிதிகள் எப்படி எப்படி எல்லாம் தவருகப் பயன்படுத்தப்படுகின்றன ? ஆலய நிலங்கள் எந்தவிதத்தில் பினாமி நடவடிக்கைகளின் காரணமாக வருமானம் இல்லாமல் இருக்கின்றன, இவைகளைத் தடுத்து எப்படி ஆலய வருமானத்தை அபிவிருத்தி செய்வது என்பதுபற்றியும் மக்கள் மத்தியில் பிரசாரம் செய்யவேண்டும். இவ்வாறு பிரசாரம்செய்து அரசுடன் ஒத்துழைக்க முன்வந்தால் சில அரசியல் கட்சிகள் மேற்கொள்ளும் அரசியல் சாயம் வெளுத்துவிடும் ".

இது தஞ்சையில் அறநிலைய அமைச்சர் அளித்த பேட்டியின் ஒரு பகுதி. சமூகப் பிரச்சினைகள் பலவகை என்பதை அனைவரும் அறிவர். சிலவற்றை வீட்டில் பேசித் தீர்க்கலாம். சிலவற்றைத் தெருவில் பேசித் தீர்க்கலாம். எல்லாப் பிரச்சினைகளையும் வீதிக்கே கொண்டு

வருவது என்பது பொருத்தமாக இருக்காது. பக்தியோடு, பண்பாடு வளர்க்கும் தெய்வீக நிலையங்களின் பிரச்சனைகளை எல்லாம் மக்கள் முன் வைத்து, பொதுக்கருத்து ஒன்றை உருவாக்கி மக்களை எழுச்சி கொள்ளச் செய்வது என்பது விரும்பத்தக்கது அன்று, மேலும் மக்களின் பொதுக்கருத்தை உருவாக்குவது பிரச்சனைகளை அரசுக்கு உணர்த்துவதற்கே என்பது வெளிப்படை.

அறநிலையங்களின் பிரச்சனைகளை தமிழக அரசே முற்றிலுமாக உணர்ந்திருப்பதால் இவ்வகையில் மேலும் மக்கள் மத்தியில் பிரசாரம் தேவைப்படுவதாகத் தோன்றவில்லை. வேண்டிய அளவிற்கு இந் நாட்டு அறநிலையங்களும் ஆன்மீக நெறிநிற்கும் ஏடுகளும், சமயப் பிரசாரகர்களும், அறநிலையங்களின் வளர்ச்சிக்குத் தடையாக இருப் பவை எவை என்பதை மக்கள்முன் பல ஆண்டுகளாக விளக்கிவந் திருக்கிறார்கள். தடைகளை அகற்றும் அரசின் முயற்சிக்கு இவர்கள் என்றும் அரசுக்குத் துணைநிற்கத் தயாராக இருக்கிறார்கள் என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.

**வரலாற்று வாழ்வு :**

பக்திப்பிரசாரம் செய்பவர்கள் ஒருவேலியைத் தங்களுக்குள் வகுத்துக்கொண்டு ஒருவிதபண்பாட்டுடன் அறநெறிப் பிரசாரம் செய்து வருகிறார்கள். தீயசெயல்களில் ஈடுபட்டுள்ளோர்களுக்கு நேரிட்ட எதிரிபோல எதிருக்கு எதிர்நின்றுபேசும்அளவுக்கு அவர்கள் பேசுவதை விரும்பமாட்டார்கள். அவர்கள் அப்படிப்பேச முற்படு வதும்எடுத்துக்கொண்டபக்திப்பிரசாரத்திற்கு ஏற்றதாகாது. அப்படிப் பேசினால் அது அரசியல் மேடைப்பேச்சாக ஆகிவிடும். அவர்கள் தாம் வகுத்துக்கொண்ட வழியில் தீயவர்களைக் கண்டித்தும் பிரசாரம் செய்து வருகிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்.

ஒவ்வோர் அரசும் தம் ஆட்சிக்காலத்தில் சில குறிப்பிடத்தக்க சாதனைகளைச்செய்து வரலாற்றில் தம் பெயரை ஆழப் பதித்துக் கொள்ளுவதுண்டு. அரசியலில் ஊழலையும், லஞ்சத்தையும் ஒழித் திருக்கும் பெருமையோடு இந்நாட்டுத் தெய்வீகத் திருக்கோயில்களை உயிர்ப்போடு வாழவைத்த பெருமையையும் புதிய அகில இந்திய அண்ணா தி மு. க. அரசு பட்டயமாக்கிக்கொள்ள வேண்டுமென்று எதிர்பார்க்கிறோம். இம்முயற்சியில் அரசு தீரத்துடன் ஈடுபட்டு களை நீக்கிப் பைங்கூழை வாழவைக்கும் என்று எதிர்பார்க்கிறோம். இதற்கான முயற்சியில் இவ்வரசு வெற்றிபெற இறையருள் பூரணமாகத் துணை நிற்கப் பிரார்த்திக்கிறோம்.

கோயில் வளரக் குடிவளரும்!
குடிவளரக் கோல் வளரும்!!

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26-ஆவது குருமகாசந்நிதானம்

## ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

வழங்கியருளிய

# *ஆசியுரை

## தாயுமானவர் விளக்கும் சைவச் சிறப்பு

உலகில் எத்தகையோரும் பிறருடன் கலந்து பழகியும், பிறர் சொல்வனவற்றிற்கு மதிப்புக் கொடுத்துக் கேட்டும் வந்தாலும் தமக்கென ஒரு கொள்கை அவர்கட்கு இருத்தல் வேண்டும். அதோடு 'அக்கொள்கை சிறந்தது' என்ற நம்பிக்கையும், பற்றும் அதில் அவருக்கு இருத்தல் இன்றியமையாததாகும். ஒரு கொள்கையை ஒருவர் பிறருக்குச் சொல்லும்பொழுது, முதலில், சொல்லுபவருக்கு அதில் பற்று இருத்தல் மிகமிக இன்றியமையாதது.

தாயுமானவரது ஆன்மீகக் கொள்கை சைவம் அல்லது சைவ சித்தாந்தம் என்பது தெளிவு. அதில் அவருக்கிருந்த ஆர்வமும், பற்றும் அளவிடற்கரியன. அவர் அனைத்துச் சமயங்களையும் மதித்து அவற்றில் உள்ள உண்மைகளை ஏற்கின்ற ஒரு சமரச நிலையை உடையவர். ஆனால், அதே சமயத்தில் அவர் சைவ சமயத்தைத் தமது ஆன்மார்த்த சமயமாகக் கொண்டிருந்தார் என்பது நன்கு அறியப்பட்டதொன்று. 'சைவ சமயம் ஒன்றே ஆன்ம லாபத்தைத் தருவது' என்பது அவரது உறுதியான நம்பிக்கை. அதனை அவர் தமது பாடலில் பல இடங்களில் பலவகையாக எடுத்துக் கூறியுள்ளார். தாயுமானவரது நெறியை உள்ளவாறு உணர்ந்து பின்பற்றுதற்கு அவற்றுள் ஒன்றிரண்டை நாம் நினைவுகூர்தல் நலமாகும்.

---

* அகில இந்திய வானொலியில் திருச்சி நிலையத்திலிருந்து 'நெறி விளக்கம்' என்ற தலைப்பில் தாயுமானவர் நெறிபற்றி 11—2—1978 அன்று வழங்கியதைத் தழுவியது. வானொலி நிலையத்தாரின் அனுமதியுடன் வெளியிடப்பெற்றது.

"சைவ சமயமே சமயம் சமயாதீதப் பழம்பொருளைக்
கைவந்திடவே மன்றுள்வெளி காட்டும் இந்தக் கருத்தை விட்டுப்
பொய்வந் துழலும் சமயநெறி புகுத வேண்டா"

என்பது அவருடைய திருப்பாடல்கள் ஒன்றின் பகுதி. சைவத்தின் சிறப்பை இதை விட ஒருவர் தெளிவாகச் சொல்ல இயலாது.

'சமயம்' என்பது பரம்பொருளை அல்லது மெய்ப்பொருளை அடையச் செய்வது. ஆனால், 'சமயம்' என்று தோன்றியவை பலவும், ஒன்று சொல்வதை மற்றொன்று மறுத்துத் தாம் வேறு ஒன்றைக் கூறும் வாதங்களாகவே அமைந்துவிட்டன. அதனால் 'சமயம்' என்றாலே 'வாதம்' என்று ஆகிவிட்டது. இதுபற்றியே மாணிக்கவாசகர்,

"சமய வாதிகள் தத்தம் மதங்களே
அமைவ தாக அரற்றி மலைந்தனர்"

என்று அருளினர். தாயுமான அடிகளும்,

"போதித்த சமயமோ
ஒன்றுசொன படிஒன்று பேசாது"

என்றார்.

"ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனின்
அன்றென்ப ஆறு சமயத்தார்"

என்று திருவள்ளுவமாலையில் ஒரு பாட்டு உள்ளது. இதனால், 'பரம்பொருள்' அல்லது 'மெய்ப்பொருள்' என்பது சமயங்களுக்கு அப்பாற்பட்டதாகவே ஆகிவிட்டது. அதனையே இங்கு அடிகள் "சமயாதீதப் பழம் பொருள்" என்றார்.

சமயங்களின் நிலை இதுவாயினும், அவைபோலச் சமயத்தின் ஆதி நோக்கத்தை விடுத்து வாதங்களிலே புகாமல் மெய்ப்பொருளை அடையச் செய்யும் நிலையை உடையதாய் இருப்பது சைவ சமயம் என்பதையும், அதனால் 'சமயம்' என்பதற்கு உண்மைப் பொருளாய் உள்ளது சைவமே என்பதையும் அடிகள்,

"சைவ சமயமே சமயம்" —(ஏன்)

"சமயாதீதப் பழம் பொருளைக்
கைவந்திடவே காட்டும்"

என்றார். இதற்குமேல்,

"இந்தக் கருத்தை விட்டுப்
பொய்வந்துழலும் சமயநெறி புகுத வேண்டா"

என்றும் கூறுகின்றார் என்றால் உண்மை உணர விரும்புவார்க்கு இதைவிட இன்னும் என்ன கூறவேண்டும்?

இனி அடிகள், "சைவ சமயமே சமயம்" என்று இவ்வாறு பொதுவாகச் சொல்லியதனோடு நின்றுவிடவில்லை. அதற்குரிய காரணங்களையும் ஓரளவு எடுத்து விளக்குகிறார். அவற்றுள்,

"யாது சமயமும் வணங்கும் இயல்பதாகி"

என்பது ஒன்று. மற்றும்,

"இயல்பென்றும் திரியாமல் இயமமாதி
எண்குணமும் காட்டி அன்பால் இன்பமாகிப்
பயனருளப் பொருள்கள் பரிவார மாகிப்
பண்புறவும் சௌபான பட்சம் காட்டி
மயலறு மந்திரம் சிட்சை சோதிடாதி
மற்றங்க நூல் வணங்க மௌன மோலி
அயர்வறச் சென்னியில் வைத்து ராசாங்கத்தில்
அமர்ந்தது வைதிக சைவம் அழகிதந்தோ"

என்கின்றார். சைவம் சைவாகமத்தின் வழிவந்தது. சைவாகமம் வேதத்திற்குமாறாக எழுந்தவை அல்ல. வேதத்தின் விளக்கமாகவே எழுந்தன. அதனால் சைவம், 'வைதிக சைவம்' எனப்படுகின்றது. வேதம் தழுவியும் தழுவாதும் எழுந்த சமயங்கள் பல. 'சைவமே வேத சாரமாய் இருத்தலால் அது, சமயங்களாகிய பிரஜைகளுக்கெல்லாம் அரசனாய் ஆட்சி செய்கின்றது' என்றும், 'அந்த அரசனுக்குப் பேசா அனுபூதியாகிய மோன ஞானமே கிரீடம்' என்றும், 'சிட்சை, கற்பம், சோதிடம் முதலிய வேதாங்கங்கள் அவனுக்குப் பணியாளர்கள்' என்றும், 'அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருடார்த்தங்களே அவனுக்குப் பரிவாரங்கள்' என்றும், தன்னை அடைந்தவர்கட்கு அவ்வரசன் அவரது பக்குவத்திற்கு ஏற்ப இம்மை மறுமை நெறிகளையும், சரியை, கிரியை, யோகம் என்னும் தவங்களையும் தந்து அவற்றிற்கு ஏற்ற பயனை அடையச் செய்து முடிவில் அவன், பக்தி ஞானம் இவை வாயிலாகப் பேரின்பப் பயனை அடையச் செய்கின்றான் என்றும் இவ்வாறெல்லாம் அடிகள் விரித்துக் கூறுகின்றார். இதனால், சைவ சமயம் ஒரு பேரரசனைப் போல யார் எது வேண்டினாலும் அதை அதற்குரிய வழியிலே சென்று பெறச் செய்வதாய் உள்ளது என்பதையும், சைவத்தை

அடைந்தவர் எந்த ஒரு நல்ல பயனையும் இழக்க வேண்டுவதில்லை அவற்றோடு கூட, எல்லாப் பயன்களுக்கும் மேலான பயனாகிய வீட்டின்பத்தையும் அடையலாம் என்பதையும் அடிகள் விளக்குகின்றார்.

இதனை அடுத்து அடிகள் " அணிமாதி அட்டமாசித்தி பெற்றவர்களானாலும், நிஷ்டாநுபூதிநிலையிலே நிற்பவர்களானாலும், இந்திராதி பதவிபெற்ற போகிகளானாலும் அவர் யாவர்க்கும் சைவ சமயம் தவிர வேறு தாயகம் இல்லை இல்லை " என்று வலியுறுத்திக் கூறுகிறார். சைவ சமயத்தைப் பற்றி அடிகள் வெளியிடும் மற்றும் ஓர் அரிய கருத்தை இன்றியமையாது குறிப்பிடல் வேண்டும். அது,

" சன்மார்க்க ஞானமதின் பொருளும் வீறு
சமய சங்கேதப் பொருளும் தான் ஒன்றாகப்
பன்மார்க்க நெறியினிலும் கண்டதில்லை "

என்பது. அஃதாவது, 'சைவ சமயத்தில் வகுக்கப்பட்டுள்ள கிரியா முறைகள் யாவும் ஞானமுறையிலேயே அமைந்திருத்தல் போல வேறு எந்தச் சமயத்திலும் இல்லை' என்பது. இவ்வாறாகக் கூறும் அவர் வாக்குகளை உணர்ந்தேனும் சைவத்தின் சிறப்பை உணர்தல் மக்கள் கடனாகும்.

## நான் முதல்வரானால்...

**சிதம்பரநாதன் (திருச்சி)**

தமிழகத்தில் உள்ள ஆலயங்களை எல்லாம் தருமபுர ஆதீனம் வசம் ஒப்படைத்துவிடுவேன். அதில் அரசு தலையிடவே தலையிடாது. கோவில் நிதிகள் கோயிலைச் சுற்றிய மக்களின் சுத்தம், சுகாதாரம், கிராமியக் கலைகள், திருமறை இலக்கியங்கள் ஆகியவைகளை வளர்க்க மட்டும் செலவிடப்படும்.

நன்றி: சத்திய கங்கை

15—6—78

உ

# குருபெயர்ச்சி விழா

## 31—7—78 திங்கட்கிழமை காலை 11-மணிக்கு

## குருபகவான் கடகராசிக்கு எழுந்தருளுகிறார்.

குரு இயற்கையிலேயே தனிச் சிறப்புவாய்ந்த சுபக்கிரகம். சாத்விககுணம் உடையது. காலபுருஷனுடைய அறிவாகக் கூறப்படுவது. நுண்ணறிவு, செல்வம், உடல்வளர்ச்சி, மகப்பேறு இவைகளை அடைவதற்குக் காரணமாவது. ஜாதகத்தில் இக்கிரகத்தின் நிலையைக் கொண்டுதான், இப்பலன்களை நிர்ணயிக்கவேண்டும். குரு நல்ல நிலையில் ஜாதகத்தில் அமையுமானால் அந்த ஜாதகக்காரருக்கு நன்மை உண்டாகும்.

தனுசும் மீனமும் இக்கிரகத்துக்குச் சொந்த வீடாகும். கடகம் உச்சமாகும். மகரம் நீசமாகும்.

வருகிற குருபெயர்ச்சியன்று குரு தனது உச்ச வீடாகிய கடக ராசிக்கு எழுந்தருளுவதால் சுபக்கிரகம் வலுவடைந்து உலகிற்குப் பல நன்மைகளை அளிக்கும். பெரும்பாலும் ஒவ்வொரு ராசியிலும் ஒவ்வோராண்டு இக்கிரகம் சஞ்சரிக்கும் ஆதலால் கடக ராசியில் சஞ்சரிக்கும் காலம்வரை நாட்டில் தர்மகாரியங்கள் மேலும் சிறப்பாக நிகழும். அறநிலையங்களுக்கு வலிமை ஏற்படும். அமைதியும், சுபிட்சமும் உண்டாகும். பருவமழை நன்குகப் பெய்து வளம் கொழிக்கும். நல்லகாரியங்களில் மக்களுக்கு ஈடுபாடு உண்டாகும்.

அவரவர்கள் ஜாதகத்தில் சந்திரனை முதலாகக்கொண்டு கணக்கிடும்போது கடகராசி 2, 5, 7, 9, 11 ஆவது இடமாக இருந்தால் அந்தஜாதகக்காரருக்குத் திருமணம், மகப்பேறு, நோய்நீக்கம் ஆகிய நன்மைகள் ஏற்படும். 1, 3, 4, 6, 8, 10, 12 ஆவது இடமாக அமையுமானுல் சில கஷ்டங்கள் உண்டாகலாம். அவர்கள் ஆலயத்திற்குச் சென்று இறைவனை வழிபட்டு, கஷ்டங்களிலிருந்து விலகவேண்டும்.

குரு ஞானகாரகன். இறைவன் குருவடிவில் ஞானோபதேசம் செய்பவர். ஆதலின் குருவடிவில் எழுந்தருளியிருக்கும் தட்சிணுமூர்த்தியை வழிபடுதல் வேண்டும்.

தருமபுர ஆதீனத்திற்குச் சொந்தமான மாயூரம் வள்ளலார் கோயிலில் எழுந்தருளியிருக்கும் **ஸ்ரீ மேதா தட்சிணுமூர்த்திக்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவுள்ளப்பாங்கின் வண்ணம் 20—7—78 வியாழக்கிழமை முதல் லட்சார்ச்சனை தொடங்கி** நடைபெற இருக்கிறது. அன்பர்கள் சகஸ்ரநாம அர்ச்சனை ஒன்றுக்கு ரூ. 10—00 வீதம் செலுத்தி இறைபணியில் பங்குகொள்வார்களாக.

தருமையாதீன மடாலய பூஜைமடத்தில்



ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்

புதுவை மாநில அறநிலையத்துறை அமைச்சர்

மாண்புமிகு இராமச்சந்திரன் அவர்களுக்குப்

பொன்னுடைபோர்த்தி ஆசி அருளுதல்.

தருமையாதீன மடாலயம் பண்டாரக்கட்டில்



ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களிடம்
அறநிலையங்களின் ஆக்கங்கருதி
அமைச்சர் அவர்கள் ஆலோசனை பெறுதல்.
2—7—78

# திருப்பூந்துருத்தி, திருக்கண்டியூர்த் தலச் சிறப்புக்கள்

தருமையாதீனத் தமிழ்ப் புலவர்
வித்துவான். வி. சா. குருசாமி தேசிகர், எம். ஏ.

## 1. திருப்பூந்துருத்தி

திருநாவுக்கரசு சுவாமிகள் திங்களும் ஞாயிறும் தோயும் திருமடம் அமைத்து அத்ன்கண் எழுந்தருளியிருந்து, திருத்தொண்டுகள் பலவும் புரிந்து. திருப்பதிகங்கள் அருளிச்செய்து வழிபட்ட சிறப்பிற்குரிய திருத்தலம் திருப்பூந்துருத்தி. இத்திருத்தலம் பொன்னி எந்நாளும் பொய்யர் தளிக்கும் புனல்நாடு என்று தெய்வச் சேக்கிழார்பெருமானுல் போற்றி உரைக்கப்பெற்ற சோழவளநாட்டில் தஞ்சை மாவட்டத்தில் திருவையாற்றுக்குத் தென்மேற்கே காவிரித்தென்கரையில் விளங்குகிறது. திருவையாற்றைத் தலைமைத் தலமாகக்கொண்டு விளங்கும் சப்தஸ்தானத் தலங்களில் ஒன்ருய்த் திகழ்ந்துவருகிறது.

**செல்லும் வழி :**

இத்தலம் திருக்கண்டியூரிலிருந்து 3 - கிலோமீட்டர் தூரத்தில் திருக்காட்டுப்பள்ளி செல்லும் பேருந்துவழியில் உள்ளது. தஞ்சை, தோகூர், திருவையாறு, பூதலூர், திருக்காட்டுப்பள்ளி ஆகிய ஊர்களிலிருந்து இத்தலத்தை அடையப் பேருந்துவசதிகள் உள்ளன. தஞ்சையிலிருந்து நகரப் பேருந்திலும் இவ்வூருக்குச் செல்லலாம்.

**பெயர்க்காரணம் :**

சோழ மன்னன் துருத்தியை வைத்துப் பூசிக்கச் செய்ததனுல் திருப்பூந்துருத்தி என்று பெயர்வந்தது என்று கூறுவர். ஆற்றிடைக் குறையில் உள்ள ஊர்கள் துருத்தி என்று வழங்கப்பெறும். இத்தலம் காவிரி குடமுருட்டி ஆறுகளுக்கு இடையில் அன்று விளங்கியதால் துருத்தி எனப்பெற்றது என்றும் கூறலாம். மாயூரத்திற்கு அண்மையில் உள்ள குத்தாலம் திருத்துருத்தி என வழங்கப்பெறும் பிறிதொரு தலமாகும்.

புராண வரலாற்றில் பின்வரும் பெயர்க் காரணம் கூறப்படுகிறது. இந்திரன் சீகாழியில் தங்கியிருந்து மலர்வனம் அமைத்து இறைவனை வழிபட்டகாலத்தில் அப்பூங்காவை வளப்படுத்துவதற்காக அவ்விந்திரன் வேண்டுகோளின்படி விநாயகர் காவிரியைச் சோழநாட்டிற்கு அனுப்பினூர். காவிரி பூந்துருத்தியில் கடல்போல் தேங்கி நின்று விட்டது. இந்திரன் ஐயாறப்பரை வேண்டினன். காவிரி கிழக்கு நோக்கி ஓடி, கழுமலநகரில் இந்திரன் பூங்காவினை வளப்படுத்தியது. காவிரி ஓடியபிறகு பூப்போல மென்மையாய் மணல்மேட்டிலிருந்த நிலம் பூந்துருத்தி எனப்பட்டது எனக் கூறப்படுகிறது.

**தலப்பெருமை :**

கௌதம முனிவரின் சாபத்தினுல் உடம்பெல்லாம் ஆயிரம் கண்களைப் பெற்ற இந்திரன் இத்தலத்தில் மலர்வனம் உண்டாக்கி அம்மலர்களைத்தூவி இறைவனை வழிபட்டு உடல்நலம் உற்ருன் எனக் கூறுவர். இந்திரன் உண்டாக்கிய புட்பவனத்தில் எழுந்தருளியிருந்த காரணத்தினுல் இத்தலப்பெருமான் புட்பவனநாதர் எனப்பெற்ருர். தேவர்கள் பலரும் மலர் தூவி வழிபட்ட சிறப்பினுலும் இறைவன் இப்பெயர் பெற்ருர் எனவும் கூறுவர். இதனை "வானேர் உலக மெல்லாம் வந்திறைஞ்சி மலர்கொண்டுநின்று போற்றும் வித்தானை" என்று கூறுவார் அப்பரடிகள். திருமால் திருமகள் வழிபட்ட தலம்.

சூரியன் தக்கன் வேள்விக்குச் சென்றதால் ஏற்பட்ட சிவாபராதத்தைப் போக்கிக்கொள்ள, தன் பெயரால் தீர்த்தம் உண்டாக்கி அதில் நீராடி வழிபட்டு அருள்பெற்றுள்ளான். கழுகுருவம்பெற்ற விஞ்சையர் இருவர் இத்தலத்தை அடைந்து மலர்வழிபாடு செய்து இறையருளால் தம் உண்மை உருவம் பெற்றுச் சென்றுள்ளனர்.

காசிப முனிவர் பதின்மூன்று கங்கைகளை இத்திருக்கோயில் ஆதி விநாயகர் சந்நிதியில் உள்ள கிணற்றில் வரவழைத்து அந்நீரால் இறைவனை அபிடேகித்து வழிபட்டு மலபரிபாகமுற்ருர் எனக்கூறுவர்.

**கோயிலமைப்பு :**

திருப்பூந்துருத்தி பெரிய கிராமம். இவ்வூர் மேலைத் திருப்பூந்துருத்தி, கீழைத்திருப்பூந்துருத்தி என்று இரண்டுபகுதியாக வழங்கப்படுகிறது. கோயில் மேலைத் திருப்பூந்துருத்தியில் அமைந்துள்ளது. கிழக்கு நோக்கிய சந்நிதி.

இராஜகோபுரம் ஐந்து நிலைகளோடு கூடியதாய்த் திகழ்கிறது. கோயிலுக்குள் நுழைந்தவுடன் சப்தஸ்தானமூர்த்திகள் எழுந்தருளும் பஞ்சமூர்த்திகள் மண்டபமுள்ளது. பெரியநந்தி சந்நிதியைவிட்டு

விலகியுள்ளது. அதை அடுத்து அம்பாள் திருக்கோயில் தெற்கு நோக்கித் திகழ்கிறது. இரண்டாவது கட்டைக்கோபுரத்தைக்கடந்து உள்ளே சென்றால் வடக்குநோக்கிய சிறிய துர்க்கைக் கோயிலும், அதை அடுத்து வசந்தமண்டபமும் உள்ளது. எதிரே சந்நிதியை விட்டுச் சிறிது விலகியநிலையில் விநாயகர் கொடிமரம் பலிபீடம் நந்தி ஆகிய மூர்த்திகள் உள்ளன. வெளிப்பிராகாரத்தை வலம்வந்து விநாயகரை வழிபட்டுக்கொண்டு ஆலயத்துக்குள் சென்றால் அழகிய பெரிய நிருத்த மண்டபத்தைக் காணலாம். இம்மண்டபத்தின் தென்புறம் விநாயகர்சந்நிதி உள்ளது. வடபுறம் சப்தலிங்கத்தலங்கள் உள்ளன. சுவாமி சந்நிதிக்குத் தென்பால் சோமாஸ்கந்தர்மண்டபம் உள்ளது. அதை அடுத்து நடராஜர் சந்நிதி உள்ளது. உட்பிராகாரத்தை வலம்வரும்போது மேற்குநோக்கிய விநாயகர் சப்தமாதர்கள் இவர்களைத் தரிசிக்கலாம்.

தெற்கு மேற்கு வடக்குத் திருமாளிகைப்பத்திச் சுவர்களில் திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர் வரலாறுகளை விளக்கும் அழகிய வண்ணச் சித்திரங்கள் எழுதப்பெற்றுள்ளன. கருப்பக்கிருகத்தின் தென்பால் தென்கயிலையும் வடபால் வடகயிலையுமாகிய திருக்கோயில்கள் திகழ்கின்றன. மேலைப் பிராகாரத்தில் முருகன் விளங்குகிறார். கருப்பக்கிருகக் கோஷ்டங்களில் தென்பால் வீணதக்ஷிணாமூர்த்தியும், மேல்பால் அர்த்தநாரீசுவரரும், வடபால் பிக்ஷாடனரும் காட்சி தருகின்றனர். உட்பிராகாரத்தை வலம் வந்து உள்ளே சென்றால் வாகன மண்டபம் மகாமண்டபம் அர்த்தமண்டபம் ஆகியன உள்ளன. கர்ப்பக்கிருகத்தில் துவாரபாலகர் காவல்புரிகின்றனர். புஷ்பவனேசுவரர்சந்நிதி மிக்க விளக்கத்தோடுதிகழ்கிறது. தரிசித்துக் கொண்டு வெளியேவந்து அம்பாள் திருக்கோயிலை அடைகிறோம். சௌந்தரநாயகி அழகிய திருவுருவோடு காட்சி தருகிறாள். பழைய அம்பாள் திருவுருவமும் கோயிலில் போற்றிப் பாதுகாக்கப்பட்டுவருகிறது.

கோயிலுக்கு வெளியே வடபால் ஈசான திசையில் அப்பர் திருமடம் விளங்குகிறது. எதிரே திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடத்தின் சார்பில் கட்டப்பெற்ற அப்பர் நூல்நிலையம் உள்ளது. அதை அடுத்து அரசினர் உயர்பள்ளி விளங்குகிறது.

**மூர்த்திகள் :**

இறைவன் திருப்பெயர் அருள்மிகு புஷ்பவனேசுவரர் என்பதாகும். பொய்யிலியார் ஆதிபுராணன் எனத் தேவாரத் திருமுறைகள் குறிக்கின்றன. இறைவியாரின் திருப்பெயர் அருள்மிகு அழகாலமர்ந்த நாயகி என்றும் சௌந்தரநாயகி என்றும் வழங்கப்பெறுகிறது. அழகாலமைந்த உருவுடைநாயகி என்று கூறுகிறார் அப்பர்.

தக்ஷிணாமூர்த்தி – கையில் வீணையை ஏந்திய நிலையில் வீணாதர தக்ஷிணாமூர்த்தியாகக் காட்சி தருகிருர். கொற்றவையாகிய துர்க்கை மகிடாசுர சம்காரத்தின் பாவங்களைப் போக்கிக்கொள்ள ஒற்றைக் காலில் நின்று இறைவனை நோக்கித் தவம் செய்யும் நிலையில் விளங்கு கிருர். தவம் செய்யும் நிலையில் உள்ள துர்க்கையையும் சாந்த நிலையில் விளங்கும் துர்க்கையையும் இத்தலத்தில் தரிசிக்கலாம். அப்பர் அமர்ந்த தோற்றத்தில் விளங்குகிருர். திருவிசைப்பா பாடிய பூந்துருத்தி நம்பிகாட நம்பியின் திருவுருவமும் கோயிலில் உள்ளது.

**தீர்த்தம் :**

காசிகங்கை, காவிரி, சூரிய புஷ்கரணி, அக்னி தீர்த்தம் முதலிய தீர்த்தங்கள் உள்ளன.

**தலமரம் :** வில்வம்.

**நந்தி விலகியது :**

இத்தலத்தில் நந்தி விலகியுள்ளது. திருஞானசம்பந்தர் அப்பர் சுவாமிகளுடன் திருக்கோயிலுக்கு எழுந்தருளி வழிபாடு ஆற்ற முற்பட்டபோது திருநாவுக்கரசர் கைத்தொண்டு செய்த இடமாகிய இத்தலத் திருக்கோயிலைக் காலால் மிதித்தல் கூடாது என்று அஞ்சி ஞானசம்பந்தர் வெளியில் நின்ருர்; இறைவன் நந்திதேவரை விலகச் செய்து ஞானசம்பந்தருக்குக் காட்சி அளித்தார் என்று கூறப்படு கிறது. இவ்வரலாறு பெரியபுராணத்தில் கூறப்படவில்லை. இத்தல வரலாற்றுள் மட்டும் காணப்படுகிறது.

**நம்பிகாடநம்பி :**

திருவிசைப்பாத் திருப்பதிகங்களை அருளிச்செய்த ஒன்பதின்மருள் ஒருவராகிய இவர் இவ்வூரில் அவதரித்தவராதலின் பூந்துருத்தி நம்பிகாட நம்பி எனப்பெற்ருர்.

அனந்தபத்மநாப நாராயணசற்குரு தீர்த்தர் இவ்வூரில் ஜீவசமாதி கூடியுள்ளார். வடலூர் இராமலிங்க அடிகள் அருணகிரிநாதர் முதலியோர் இத்தலத்தைப் பாடியுள்ளனர்.

**சப்தஸ்தானத் தலங்கள் :**

திருவையாறு, திருப்பழனம், திருச்சோற்றுத்துறை, திருவேதிகுடி, திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி, திருநெய்த்தானம் ஆகிய ஏழு தலங்களே சப்தஸ்தானத் தலங்கள் எனப்படும்.

நந்தியெம்பெருமானுக்குத் திருமழபாடியில் நடைபெற்ற திருமண விழாவின் ஊர்வலமாகச் சப்தஸ்தான விழா இவ் ஏழு தலங்களிலும் நிகழ்கிறது. ஐயாறப்பர் நந்தியெம்பெருமானுடன் சித்திரை மாதத்தில் முழுமதி நாளுக்கடுத்த விசாகத்தில் புறப்பட்டு ஏழூர்களுக்குச் செல்வார். ஏழூர் இறைவரும் ஐயாறப்பரை எதிர்கொண்டழைத்துச் சென்று தாமும் திருவுலாவிற்கு எழுந்தருள்வர். ஏழூர் இறைவரும் உலாவரும் இவ்விழா தமிழகத் திருக்கோயில் விழாக்களில் புகழ்பெற்ற பெருவிழாவாகும்.

**அப்பர் திருமடம் :**

திருநாவுக்கரசு சுவாமிகள் வானளாவிய திருமடம் ஒன்று அமைத்துக்கொண்டு அதில் எழுந்தருளியிருந்து திருத்தொண்டுகள் புரிந்தும் பல்வகைத் தாண்டகங்களையும் திருவங்கமாலை உள்ளிட்ட பல திருப்பதிகங்களையும் அருளிச் செய்தார் என்று கூறுகிறது பெரிய புராணம்.

திருப்பூந் துருத்தி அமர்ந்த செஞ்சடை யானையா னேற்றுப்
பொருப்பூர்ந் தருளும் பிரானைப் பொய்யிலியைக்கண்டேனென்று
விருப்புறு தாண்டகத்தோடு மேவிய காதல் விளைப்ப
இருப்போம் திருவடிக் கீழ்நாம் என்னும் குறுந்தொகைபாடி.

அங்குறையும் தன்மைவேண்டி நாமடிபோற்றுவ தென்று
பொங்கு தமிழ்ச்சொல் விருத்தம் போற்றிய பாடல் புரிந்து
தங்கித் திருத்தொண்டு செய்வார் தம்பிரா ணருள் பெற்றுத்
திங்களும் ஞாயிறும் தோயும் திருமடம் அங்கொன்று செய்தார்.

பல்வகைத் தாண்டகத்தோடு பரவும் தனித்தாண் டகமும்
அல்லல் அறுப்பவர் தானத் தடைவு திருத்தாண் டகமும்
செல்கதி காட்டிடப் போற்றும் திருவங்க மாலையும் உள்ளிட்டு
எல்லையில் பன்மைத் தொகையும் இயம்பினர் ஏத்தி யிருந்தார்.

திருநாவுக்கரசரைத் திருமறைக்காட்டில் பிரிந்த ஞானசம்பந்தர் பாண்டிநாட்டில் திருநீற்றொளி விளங்கச்செய்து மீண்டும் சோழநாட்டிற்கு எழுந்தருளினர். திருநாவுக்கரசரைக் காணும் பெருவிருப்போடு திருப்பூந்துருத்திக்குப் புறப்பட்டார். திருநாவுக்கரசர் திருஞானசம்பந்தரின் வருகையைக் கேள்வியுற்று எதிர்சென்று ஒருவரும் அறியாவகையில் பிள்ளையார் ஏறிவரும் சிவிகையைத் தாங்குவாரோடு தாமும் உடன்தாங்கி வருவாராயினர். ஊர் எல்லையை அடைந்தும் அப்பரைக் காணாத ஞானசம்பந்தர், அப்பர் எங்குற்றார்? என்று வினவினர். சிவிகையைத் தாங்கி வந்த அப்பர் அதனைக் கேட்ட

அளவில் உம் அடியேன் உம் அடிகள் தாங்கி வரும் பெருவாழ்வு வந்தெய்தப்பெற்று இங்குற்றேன் என்று கூறினர். ஞானசம்பந்தர் சிவிகையை நிறுத்தச்செய்து கீழே இறங்கி இவ்வாறு செய்தருளியது என்னும் என்று அப்பரைப் பணிய, அப்பரும் ஞானசம்பந்தரை வணங்க, இருவரும் உளங்கலந்து திருக்கோயில் சென்று பணிந்து அப்பர் திருமடத்தில் அளவளாவி உறைந்தனர் என்று கூறுகிறது பெரியபுராணம்.

**சம்பந்தர் மேடு :**

ஞானசம்பந்தர் ஊர்ந்துவந்த சிவிகையை அப்பர்பெருமான் எதிர் சென்று பணிந்து தாங்கிவந்த இடம் சம்பந்தர் மேடு என வழங்கப் பெறுகிறது. திருவாலம்பொழிலுக்குத் தெற்கே வெள்ளாம்பரம்பூரை யடுத்துள்ளது இம்மேடு. அன்பர் ஒருவர் இவ்விடத்தில் ஞானசம் பந்தர் அப்பர் ஆகிய இரண்டு ஆசாரியர்களுக்கும் திருக்கோயில்கட்டி விழாக்கள் நடத்திவருகிருர்.

**தலப்பதிகங்களும் பாடல்களும் :**

இத்தலத்திற்கு அப்பர்பெருமான் அருளிய மூன்று திருப்பதிகங் களும், அருணகிரிநாதர் இராமலிங்க அடிகள் முதலியோர் அருளிய பாடல்களும் உள்ளன.

**கல்வெட்டுக்கள் :-**

இராசகேசரிவர்மன் என்னும் முதல் ஆதித்தனின் (கி. பி. 871 - 907) 11-ஆம் ஆண்டுக் கல்வெட்டு திருத்துருத்தி மகா தேவர்க்கு ஒரு நந்தா விளக்கு அமைப்பதற்கு 30 கழஞ்சு பொன் கொடுத்த செய்தியையும் 25-ஆம் ஆண்டுக் கல்வெட்டு காவிதி சுப்பிரமணியன் என்பான் இவ்வூர் இறைவர்க்கு ஒரு விளக்கு எரிக்க 25 கழஞ்சு பொன் தந்த செய்தியையும் கூறுகின்றது. மதுரை கொண்ட பரகேசரியின் 4-ஆம் ஆண்டுக் கல்வெட்டு பராந்தகனின் தேவியான கோக்கிழானடிகள் திருத்துருத்தி ஊர்ச்சபையாரிடம் நிலம் வாங்கிக் கோயிலுக்கு அளித்த செய்தியைத் தெரிவிக்கிறது. சுந்தர சோழன் காலத்துக் கல்வெட்டு, சுவையானதொரு செய்தியைக் கூறுகிறது. திருத்துருத்திச் சபையார் அவ்வூரைச் சேர்ந்த நாராயணன் ஸ்ரீ மாதவன் என்பவனுக்கு 12 கழஞ்சு பொன் தண்டம் விதித்தனர். அக்குற்றவாளி தலைமறைவாகிவிட்ட நிலையில் அவன் சகோதரர்களின் நிலங்களைச் சபையார் பறிமுதல் செய்து கோயிலுக்கு உரிமையாக்கினர். மன்னன் சபையாரின் முடிவு பிழையானது என்றுகண்டு அந்நிலத்தைக் குற்றவாளியின் சகோதரர்களுக்கே திருப்பிக் கொடுக்க உத்தரவிட்டுள்ளான்.

# 2. திருக்கண்டியூர்

எல்லாம்வல்ல சிவபெருமானின் வீர ஆற்றல் வெளிப்பட்ட திருத் தலங்கள் பலவற்றுள் சிறந்த தலங்கள் எட்டினை அட்ட வீரட்டத் தலங்கள் என்பர் அறிஞர். அவற்றுள் முதலாவதாக எண்ணப்பெறுவது திருக்கண்டியூர். பிரமனது ஐந்து தலைகளுள் ஒன்றைக் கொய்து தாமே பரம்பொருள் என்பதை இறைவன் இத்தலத்தில் வெளிப்படுத்தி யுள்ளார். திருவையாற்றைத் தலைமையாகக்கொண்ட சப்தஸ்தானத் தலங்களுள் இத்தலமும் ஒன்றாகும். திருஞானசம்பந்தர் திருப்பதிகம் ஒன்றும் திருநாவுக்கரசர் திருப்பதிகம் ஒன்றுமாக இரண்டு திருப் பதிகங்கள் இத்தலத்திற்கு உள்ளன.

இத்தலம் சோழவளநாட்டில் தஞ்சைமாவட்டத்தில் காவிரித் தென்கரைத் தலங்களில் 12 - ஆவது திருத்தலமாகப் போற்றப் பெறுகிறது.

**செல்லும் வழி :**

தஞ்சாவூரிலிருந்து 10 கிலோ மீட்டர் தூரத்தில் திருவையாறு செல்லும் பேருந்துவழியில் திருவையாற்றுக்கு அண்மையில் திருக் கண்டியூர் உள்ளது. இத்தலத்திற்குச்செல்லத் தஞ்சையிலிருந்து பேருந்து வசதிகள் நிரம்ப உள்ளன.

**பெயர்க்காரணம் :**

பிரமதேவனது ஒரு தலையைச் சிவபிரான் தமது சூலாயுதத்தால் கண்டனம்செய்த (கொய்த) காரணத்தினால் இத்தலம் கண்டனபுரம் எனவும் கண்டியூர் எனவும் பெயர் எய்திற்று. இத்தலத்திறைவனுக்கும் பிரமசிரக்கண்டீசர் எனவும் வீரட்டேசுவரர் எனவும் பெயர் ஏற்பட் டன.

**கோயில் அமைப்பு :**

திருக்கண்டியூர் பெரிய கிராமமாகத் திகழ்கிறது. கோயில் ஊரின் வடபகுதியில் மேற்குநோக்கி விளங்குகிறது. ஐந்துநிலைக் கோபுரம் திருக்கோயிலுக்கு அணிதருகிறது. அழகிய பிராகாரங்கள் இரண்டு உள்ளன. இராஜகோபுரத்தைக்கடந்து உள்ளே சென்றால் இடது புறத்தில் பெரிய தண்டபாணிமண்டபம் உள்ளது. அதன் சமீபத்தில் நூலகம் விளங்குகிறது. எதிரில் பலிபீடம் கொடிமரம் நந்தி மண்ட பங்கள் உள்ளன. மங்களாம்பிகை அம்பாள்கோயில் தெற்குநோக்கி விளங்குகின்றது. வெளிப்பிராகாரத்தின் கீழ்க்கோடியில் யாகசாலையும்

தெற்கில் காளியம்மன் ஆலயமும் உள்ளன. இரண்டாம் கோபுர வாயிலின் அருகில் விநாயகர்கோயில் உள்ளது. அதன் அருகில் தலமரமாகிய வில்வம் உள்ளது.

முதற்பிராகாரத்தை வலம்வரத் தொடங்கும்போது மேற்குப்புறத் தில் முருகன் மகாலக்ஷ்மி ஆகியோரும் வடபுறம் நடராஜரும் விளங்கு கின்றனர். கீழ்பால் பைரவர் சப்தகணபதிகள் அர்த்தநாரீசுவரர் சூரியன் ஆகியோர் உள்ளனர். தென்பால் சோமாஸ்கந்தர் சந்திர சேகரர் உற்சவமூர்த்திகள் எழுந்தருளுவிக்கப்பெற்றுள்ளனர். கர்ப்பக் கிருகக் கோஷ்டங்களில் வடபால் துர்க்கையும் தென்பால் தக்ஷிணா மூர்த்தியும் உள்ளனர்.

முதற்பிராகாரத்தை வலம்வந்து ஆலயத்தில் நுழையும்போது இடப்புறம் சப்தஸ்தானலிங்கங்களையும் பஞ்சபூதலிங்கங்களையும் வலப் புறம் சாதாதப முனிவருக்குக் காட்சியளித்த காளத்திநாதரையும் முனிவரையும் சூரியனையும் வழிபடலாம். மகாமண்டபத்தில் நுழையும் போதே வீரட்டேசுவரர் நமக்கு அருட்காட்சி வழங்குவார். இறைவ னுக்கு வலப்புறத்தில் இறைவனை நோக்கிய நிலையில் பிரமனும் சரஸ் வதியும் தனியிடத்தில் வீற்றிருக்கின்றனர்.

**மூர்த்திகள் :**

இத்தலத்து இறைவர் திருப்பெயர் அருள்மிகு பிரமசிரக்கண்டீசர் என்றும் வீரட்டேசர் என்றும் வழங்கப்படுகிறது. கல்வெட்டுக்களில் திருவீரட்டானத்து மகாதேவர் திருக்கண்டியூருடைய மகாதேவர் எனக் குறிப்பிடப்படுகிறது. பிரமன் வழிபட்டு அவனுக்கு அருள் செய்த பெருமானாதலின் பிரமநாதர் என்றும் ஆதிவில்வவனத்தலைவர் ஆதலால் ஆதிவில்வநாதர் என்றும் பெயர்கள் வழங்கப்படுகின்றன. இறைவி திருப்பெயர் அருள்மிகு மங்களநாயகி என்பதாகும்.

**தீர்த்தம் :**

குடமுருட்டி, நந்திதீர்த்தம், தக்ஷதீர்த்தம், பிரமதீர்த்தம் முதலியனவாகும்.

**தலச்சிறப்பு :**

கண்டியூர் அட்டவீரட்டத்தலங்களில் பிரமனது தலைகளில் ஒன்றைக் கொய்த பெருமைக்குரியதாய் விளங்கும் தலமாகும். சப்த ஸ்தானத்தலங்களில் ஒன்றாகவும் இத்தலம் விளங்குகிறது. சாதாதப முனிவருக்காக இத்தலத்தில் வில்வமரம் சிவபெருமானால் கைலையி லிருந்து கொண்டுவரப்பெற்றது ஆதலின் ஆதிவில்வாரண்யம் என்று இத்தலத்திற்கு வேறொருபெயர் வழங்கப்படுகிறது.

**அட்டவீரட்டம் :**

இறைவன் தன் பேராற்றலை வெளிப்படுத்திய எட்டுத் தலங்கள் அட்டவீரட்டம் எனப்படும். அங்குள்ள இறைவர் வீரட்டேசுவரர் என வழங்கப்படுவார். அட்டவீரட்டத்தலங்களைப் பின்வரும் பழைய பாடல் தெரிவிக்கும்.

பூமன் சிரங்கண்டி, அந்தகன் கோவல், புரம்அதிகை,
மாமன் பறியல், சலந்தரன் விற்குடி, மாவழுவூர்,
காமன் குறுக்கை, யமன்கடவூர் இந்தக் காசினியில்
தேமன்னு கொன்றையும் திங்களும் சூடிதன் சேவகமே.

இப்பாடலில் எட்டுத்தலங்களிலும் இறைவன் செய்தருளிய வீரச் செயல்கள் கூறப்பட்டுள்ளன. 1. திருக்கண்டியூர் - பிரமன் தலையைக் கொய்த தலம். 2. திருக்கோவலூர் - அந்தகாசுரனை அழித்த தலம். 3. திருவதிகை - முப்புரங்களை எரித்த தலம். 4. திருப்பறியலூர் - தக்கனைச் சங்கரித்த தலம். 5. விற்குடி - சலந்தராசுரனைக் கொன்ற தலம். 6. வழுவூர் - தன்னைக்கொல்லவந்த யானையை இறைவன் அழித்த தலம். 7. குறுக்கை - காமனையும், 8. கடவூர் - எமனையும் சங்கரித்த தலங்களாகும்.

**பிரமன் தலையைக் கொய்த வரலாறு :**

சிவபிரானைப்போல நான்முகனும் முற்காலத்தில் ஐந்து தலைகளைப் பெற்றிருந்தான். அதனால் தானே முதற்கடவுள் எனச் செருக்குற்றான். சிவபெருமான் நான்முகனின் ஆணவத்தை அகற்ற விரும்பி அவன் எதிரில் தோன்றினர். நான்முகனின் ஐந்தாவதுதலை சிவபிரானைப் பார்த்து எனது நுதல்விழியில் தோன்றிய நீயோ என்று கூறிப் பழித்தது. சிவபிரான் பைரவரை ஏவிப் பிரமன் தலைகளில் ஒன்றைக் கொய்யுமாறு பணித்தார். பைரவர் தமது இடக்கை நகநுனியால் பிரமனது ஐந்தாவது தலையைக் கொய்தார். அத்தலை அப்படியே அவரதுகையில் ஒட்டிக்கொண்டது. சிவபெருமான் அறநெறியை உலகத்தவர் அறிந்து கடைப்பிடிக்குமாறு தாமும் கடைப்பிடித்துக் காட்ட எண்ணினர். பைரவரைப் பார்த்து இத்தீவினைதீர நீ ஐயம் ஏற்கவேண்டுமென்று கூறினர். பைரவர் பல சிவதலங்களுக்கும் சென்று ஐயமேற்றுத் திரிந்தார். காசியை அடைந்தபோது அத்தலை அவரது கையைவிட்டு நீங்கியது. நான்முகன் ஆணவமகன்று தன் துணைவியும் தானுமாய் இத்தலத்திறைவனை வழிபட்டு மீண்டும் படைப்புத்தொழிலைப்பெற்றுத் தன்னுலகம் திரும்பினன். ஆணவ முற்றோர் அழிவர் என்னும் உண்மையை உணர்த்தும் வரலாறு

இத்தலத்தில் நிகழ்ந்ததாகும். இத்தலத்திருப்பதிகங்களில் திருஞான சம்பந்தர் அருளிய திருப்பதிகத்தின் 6 ஆவது திருப்பாடலும், திருநாவுக்கரசர் அருளிய திருப்பதிகத்தின் 3 ஆவது திருப்பாடலும் இதனைத் தெரிவிக்கின்றன.

அட்ட வீரட்டங்களை இணைத்து அடைவு திருத்தாண்டகத்தில் அப்பர் அருளிய திருப்பாடல் வருமாறு :-

காவிரியின் கரைக்கண்டி வீரட்டானம்
கடவூர்வீ ரட்டானம் காமருசீர் அதிகை
மேவியவீ ரட்டானம் வழுவைவீ ரட்டம்
வியன்பறியல் வீரட்டம் விடையூர்திக்கிடமாம்
கோவல்நகர் வீரட்டம் குறுக்கைவீ ரட்டம்
கோத்திட்டை குடிவீரட் டானமிவை கூறி
நாவில்நவின் றுரைப்பார்க்கு நணுகச் சென்றால்
நமன் தமரும் சிவன் தமர்என்று அகல்வர் நன்கே"

**தலபுராண வரலாறுகள் :**

இத்தலத்தின் சிறப்புக்களைவிளக்கும் தலபுராணம் வடமொழியில் இருக்கிறது. அதன்கண் கூறப்பட்ட வரலாறுகளைக் காண்போம்.

**பிரமநாதர் :**

ஆணவமகன்ற பிரமன் இத்தலத்தில் இறைவனை வழிபட்டு அருள்பெற்ற காரணத்தினால் இத்தலம் பிரமபுரி எனப்பெற்றது. இறைவன் பிரமநாதர் என வழங்கப்பெற்றார்.

**துரோணர் மகப்பேறடைந்தது :**

துரோணர் தமக்கு மகப்பேறில்லாக் குறையைப்போக்க இங்குள்ள இறைவரைத் தும்பைமலரால் அருச்சித்து மகப்பேறெய்தினர்.

**சாதாதபமுனிவர் அருள்பெற்றது :**

இம்முனிவர் சிறந்த சிவபக்தர். நாடோறும் பல திருத்தலங்களை வணங்குவதோடு பிரதோஷ நேரத்தில் திருக்காளத்தி சென்று காளத்திநாதரை வழிபடுவதை நியமமாகக்கொண்டிருந்தார். முனிவர் திருக்கண்டியூர்வந்தபோது காளத்திசெல்லமுடியாமல் தடை ஏற்பட்டு விட்டது. அதனால் மிக்கமனவருத்தம் அடைந்து நெருப்பில் வீழ்ந்து தன் உயிரைப் போக்கிக்கொள்ள முற்பட்டார். காளத்தி இறைவன் வில்வமரத்தில் தானும் உமையுமாகக் காட்சி வழங்கி முனிவருக்கு அருள்புரிந்தார்.

**தக்கன் முதலியோர் அருள் பெற்றது :**

தக்கன் சிவபெருமானை அவமதித்த குற்றம் தீர இத்தலத்தில் இறைவனை வழிபட்டு அருள்பெற்றான். பகீரதன் கண்டியூர் வீரட்டேசுவரரை வணங்கி அருள்பெற்றுக் கங்கையைப் பூமிக்குக் கொண்டு வந்தான். தேவலர் என்ற முனிவரால் சாபமுற்றுப் பிரமராக்ஷசனாகவும் பலாலமரமாகவும் மாறிய சித்திரத்துவசன் குணவதி என்ற கந்தருவர் பலாச முனிவரின் அருளால் இத்தலத்தில் வழிபட்டு மீண்டும் பழைய உருவம் பெற்றனர்.

**கல்வெட்டுக்கள் :**

இக்கோயிலில் பல்லவ மன்னர்களில் கோவிசைய நிருபதுங்க வர்மன், சோழர்களில் மதுரைகொண்ட கோப்பரகேசரிவர்மன் உத்தம சோழன், பாண்டியன் தலைகொண்ட கோப்பரகேசரிவர்மன் முதலாம் இராஜேந்திரன் காலத்துக் கல்வெட்டுக்கள் உள்ளன. இவை இத்தல இறைவனுக்கு நிவேதனப் பொருள்களுக்கும் நுந்தா விளக்குகளுக்கும் நிவந்தங்கள் விட்ட செய்தியைத் தெரிவிக்கின்றன. 'அறம் மறவற்க அறமல்லது கைதராதே' என்பது இராஜேந்திரசோழன் கல்வெட்டின் காப்புரையாகும்.

---

## அன்னை அருள்மாலை

திருமுறைக் கலாநிதி
**வேலூர், திரு. க. சொக்கலிங்க ஓதுவார்.**

வேலவன் தாதைமகிழ் பாலைத்துறை தவள
வெண்ணகை யம்மைநல்லூர்
வீற்றிடும் கல்யாண சுந்தரி ஆவூர்
விரும்புமங் களநாயகி
சாலத் தொழுந்திருச் சத்திமுத் தத்தினில்
தங்கும் பெரியநாயகி
சதுர்மறைகள் துதிசெயும் திருப்பட் டீச்சுரத்
தலத்திற்பல் வளைநாயகி
ஆலமுண் டானுறையும் பழையாறை வடதளியில்
அணிசோம கலாநாய்கி
அஞ்சலெனும் திருவலஞ் சுழிப்பெரிய நாயகி
அருள் திருக் குடமூக்கிலே
பாலன்ன மெனவளரும் மங்கள நாயகி
பண்ணிலுறு பெண்ணமுதமே
பஞ்சின்மெல் லடியிணையைத் தஞ்சம் அடைந்தென்றும்
பணிவேற்கருள் அன்னையே. (10)

# இறைவா! உன் ஆலயத்தில்....

**தினமலர் நிருபர்**

இந்து ஆலயங்களின் சொத்துக்கள் எப்படி தனிப்பட்டவர்களால் தவருகக் கையாளப்பட்டு வருகிறது என்பதனையும், ஏராளமான சொத்துக்கள் இருக்கின்ற கோயில்கள்கூட எப்படிச் சீரழிந்து கிடக்கின்றன என்பதனையும் ஏற்கனவே விளக்கி இருந்தோம்.

ஆன்மீகப் பெருமக்களிடமிருந்தும் வாசகர்களிடமிருந்தும் இந்தக் கட்டுரைத் தொடருக்குக் கிடைத்துள்ள பலத்த வரவேற்பைத் தொடர்ந்து இந்தப்பகுதி மீண்டும் தொடர்கிறது. கோயில் சொத்துக்களைக் கண்காணிக்கவும், நிர்வாகமுறைகளைச் சீர்திருத்தி அமைக்கவும் அரசு தீவிரமாக ஆலோசித்து வருவதாகத் தெரிகிறது.

கலை வளர்க்கும் காவிரிக் கரையில் நால்வர் பாடிய பெருமைக்குரிய திருப்பராய்த்துறை ஸ்ரீ தாருகாவனேஸ்வரர் ஆலயத்தின் இன்றைய அவல நிலையை இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

**திருப்பராய்த்துறை :**

தென்னகத்தின் மிகப் பிரசித்தி பெற்ற சிவஸ்தலங்களில் திருப்பராய்த்துறையும் ஒன்று. 120 அடி உள்ள கம்பீரமான 7 அடுக்கு ராஜகோபுரமும், 564 அடி நீளம், 238 அடி அகலம், 30 அடி உயரத்துடன் ஓங்கி உயர்ந்து நிற்கும் மதில் சுவரும் காண்பவர்களைப் பரவசப்படுத்தக்கூடிய அழகு படைத்தவை ஆகும்.

"மூதறிவுந்திய தீக்ஷை செப்பிய ஞானம் விளங்கிய
மூர்த்தியற்புத மூவர் இலங்கு பராய்த்துறை பதி பெருமாளே".

என்று அருணகிரிநாதர் பாடிய பெருமை படைத்த இந்தக்கோயில் பற்றிய தெளிவான வரலாறு எதுவும் இல்லை. ஆயினும் இங்குக் காணப்படும் பல கல்வெட்டுக்களிலிருந்து கோச்செங்கட்சோழன் கட்டியிருக்கலாம் என்று கணிக்கப்படுகிறது.

இந்தச் சோழ அரசன் காவிரிக்கரை ஓரங்களில் 70 கோயில்களைக் கட்டியதாக வரலாறு கூறுகிறது. மூன்றும் நந்திவர்மன் மனைவியருள் ஒருத்தியான மாறம்பாவையாலும் இன்னும் பிறராலும் திருப்பராய்த்துறைக் கோயிலுக்கு அறங்கள் செய்யப்பட்டதாகச் சில கல்வெட்டுகளிலிருந்து தெரிகிறது. அதன் பின்னர் ஆதித்தசோழன் இதனைக் கற்கோயிலாக மாற்றி அமைக்கும் திருப்பணியைச்செய்தான். இருபதாம்

நூற்றுண்டின் துவக்கத்தில் உருக்குலேந்த நிலையிலிருந்த இக்கோயிலைக் காளுடு காத்தான் இளையான்குடி மரபில் வந்த வெ. வீரநாகப்ப செட்டியார் புதுபித்துப்பாதுகாத்தார். 1904-ம் ஆண்டுபாலஸ்தானம் செய்யப்பட்டது.

முற்காலச் சோழர்களில் ஒருவன் வேட்டைக்குச் சென்றபோது பராய் மரத்தடியில் ஒரு சுயம்புலிங்கம் இருப்பதையும், அதற்குமேல் பொற்கிளிகள் சுற்றிக்கொண்டு இருப்பதையும் கண்டான். மகத்துவம் வாய்ந்த இந்தச் சுயம்புலிங்கத்தைத் தோண்டி எடுக்கமுயன்றபோது தோண்டுவதற்கு உபயோகித்த கருவி லிங்கத்தின்மீது பட்டதால் காயம் ஏற்பட்டது. லிங்கத்தில் காயம் பட்ட இடத்திலிருந்து பால் வடிந்ததால் சோழ அரசன் அதனைத் தோண்டும் முயற்சியைக் கை விட்டுத் திரும்பியதாகவும் செவிவழிச் சரித்திரச் செய்திகள் உள்ளன.

சுவையானதொரு இதிகாச வரலாறும் எடுத்துரைக்கப்படுகிறது. தாருகாவனத்து முனிவர்கள் அகம்பாவத்தினுல் கடவுளைவிடத் தாங்களே உயர்ந்தவர்கள் என்று கருதித் தேவர்களுக்குத் தொல்லை கொடுத்தனர். சிவபெருமான் பிட்சாண்டவர் உருவில்வந்து முனிவர் களின் மனைவிமார்களை அழைத்துச் சென்று விட்டார். பெருமாள் மோகினி உருவில்வந்து முனிவர்களை யாகசாலையிலிருந்து காவிரியின் அக்கரைக்கு அழைத்துச் சென்றுவிட்டார்.

இப்படி ஏமாற்றப்பட்டதால்கோபம்கொண்ட தாருகாவன முனிவர் கள் துஷ்ட மிருகங்களையும், முயலகன் என்னும் பூதத்தையும் உரு வாக்கிச் சிவபெருமான் மீது ஏவி விட்டனர். சிவபெருமான் தட்சிணு மூர்த்திஉருவெடுத்துமுயலகனையும், துஷ்டமிருகங்களையும் அழிக்கிருர். இதன்பின்னர் தாருகாவன முனிவர்கள் சரணடைகிருர்கள்.

அந்தத் தாருகாவனம் இன்றைய திருப்பராய்த்துறை என்று கூறுகிருர்கள். பராய்மரம் அங்கு ஸ்தல விருட்சமாக இருந்து வருகிறது. இத்தனைச் சிறப்புக்களும் படைத்த பிரமாண்டமான இந்தக்கோயில் இன்று ஒளி இழந்து இருண்டு கிடக்கிறது.

அந்தக் காலத்தில் கோயிலைக் கட்டிய மன்னர்கள் அந்தக் கோயில்கள் தங்களது காலத்திற்குப் பின்னரும் பாதுகாக்கப்பட வேண்டும்என்ற உணர்வோடு கோயிலுக்குச் சொத்துக்களையும் வழங் கினுர்கள். சொத்துக்களைச் சாப்பிட்டு விட்டுக் கோயிலை இருளாக்கி விடுவார்கள் என்பதை எதிர்பார்க்கவில்லை.

திருப்பராய்த்துறை ஸ்ரீ தாருகாவனேஸ்வரர் ஆலயத்திற்கு 81 ஏக்கர் நிலம் இருக்கிறது. ஆனுல் வெள்ளிக்கிழமைகளில்கூட விளக்குகள் எரியாமல் கோயில் இருண்டு கிடக்கிறது.

இந்தக் கோயிலுக்குச் சொந்தமான 56 புள்ளி 91 ஏக்கர் நஞ்சை நிலங்களையும், சுமார் 24 ஏக்கர் தோப்புகளையும் வைத்திருக்கும் சிலர் செழிப்பாக வாழ்ந்துவருகிறார்கள். கோயில் எப்படிக் கிடந்தால் அவர்களுக்குக்கென்ன கவலை? காவிரிநீர் பாயும் ஒரு ஏக்கர் நன்செய் நிலத்தின் மதிப்பு 25 ஆயிரம் ரூபாய். கோவிலுக்குச் சொந்தமான நன்செய் நிலத்தின் மதிப்பு 14 லட்சம் ரூபாய். வாழையும், நெல்லும், கரும்பும் அதில் பயிரிடப்படுகிறது. பணப் பயிர்களின் மூலம் ஏக்கருக்கு 4 ஆயிரம் ரூபாய் ஆண்டு வருமானம் என்று கணக்கிட்டால் 56 ஏக்கரில் இருந்து 2 லட்சத்து 24 ஆயிரம் ரூபாய் கிடைக்கும். ஆனால் இந்த 56 ஏக்கர் நன்செய் நிலங்களிலிருந்து நிர்ணயிக்கப்பட்ட குத்தகைத் தொகை (நெல் குத்தகை கணக்குப்படி) எவ்வளவு தெரியுமா? ஆண்டுக்குச் சுமார் 28 ஆயிரம் ரூபாய்தான். இதுவும் சரியாக வசூலாகிறதா? வசூலானால் கோயில் ஏன் இருண்டு கிடக்கவேண்டும்?

தோப்பு குத்தகை 20 ஆயிரம் ரூபாய், காலிமனை வாடகை மற்றும் இதர வருமானங்களையும் சேர்த்துக் கோயில் சொத்துக்களின் மொத்த வருட வருமானம் சுமார் ஒரு லட்சம் ரூபாய். இந்த ஒரு லட்சம் ரூபாய் குத்தகையும் சரியாக வசூலானால் கோயில் நித்தியபூஜைகளைச் சிறப்பாகச் செய்வதுடன் நன்றாக பராமரித்து வரமுடியும். நியாயமாக 3 லட்ச ரூபாய்க்கு மேல் குத்தகை வசூலிக்க வேண்டுமென்றாலும் நிர்ணயிக்கப்பட்ட ஒரு லட்ச ரூபாயைக் கூட குத்தகைதாரர்கள் தருவதில்லை.

கோயிலின் நிலங்கள் சுமார் 15 பேர்களிடம் இருக்கிறது. ஆண்டுக்கு 250 ரூபாய் குத்தகைக்கு 20 ஏக்கர் நன்செய் நிலத்தை தி. மு. கழகத்தைச் சேர்ந்த ஒரு பஞ்சாயத்துத் தலைவர் அனுபவித்து வருவதாகக் கூறப்படுகிறது.

பினாமியாக நிலங்களை வைத்து அனுபவித்து வருகின்ற இந்த தி. மு. க. பிரமுகர் அதற்குள்ள குத்தகையையும் சரியாகத் தருவதில்லையென்றுதிருப்பராய்த்துறை கிராமவாசிகள் பேசிக்கொள்கிறார்கள்.

குத்தகையை வசூலிப்பதற்காகக் கோயிலின் நிர்வாக அதிகாரி (அடிஷனல் இன்சார்ஜ்) குளித்தலையில் இருந்து புறப்பட்டுத் திருப்பராய்த்துறை வருவதற்குள் இந்தச் செய்தியை அறிந்துகொள்ளும் குத்தகைதாரர்கள் நிர்வாக அதிகாரி வரும்போது வீட்டில் இருப்பதில்லையாம். கோயில் சிப்பந்திகளைக் கைக்குள் போட்டுக்கொண்டு இப்படித் தந்திரமாக நடத்துகொள்வதாகக் கூறப்படுகிறது.

தனது குடும்பத்துத் திருமணம் ஒன்றுக்காக ஊரையே அலங்கரித்து அரசியல் தலைவர்களையெல்லாம் அழைத்து, பெரிய மாநாடு போல் நடத்துகிற குத்தகைதாரர் விழாக்கள் எல்லாம் நின்றுபோய்

கிடக்கின்ற கோயிலுக்குக் கொடுக்க வேண்டிய குத்தகையைக்கூடக் கொடுப்பதில்லையே என்று மனம் வருந்துகிறார் ஒரு ஆன்மீகவாதி. கடவுள் பக்தியே சிறிதும் இல்லாதவர்களிடமெல்லாம் இக்கோயில் நிலங்கள் சிக்கிவிட்டதே என்றும் கடவுளின்மேல் பக்தி இல்லை என்றாலும் கோயில் சொத்துக்களின் மீது பக்திகொண்டிருக்கும் மனச்சாட்சி இல்லாதவர்கள் இருக்கிறார்கள் என்றும் அவர் மனம் நொந்து கூறுகிறார்.

600 ரூபாய் குத்தகை நிர்ணயிக்கப்பட்டுள்ள ஒரு ஏக்கர் கோயில் நிலத்தை 3 ஆயிரம் ரூபாய்க்கு உள் குத்தகைக்கு விட்டு விவசாயமே செய்யாமல் சம்பாதித்து வருகின்ற குத்தகைதாரர்களும் இருக்கிறார். இருந்து கிடைத்த வருமானத்தைக்கொண்டு புதிதாகச் சொத்து வாங்கிக்கொண்டவர்களும் இருக்கிறார்களாம். கோயில் நந்தவனத்தில் இருக்கும் தென்னந்தோப்பிலிருந்து தேங்காய்கள் திருட்டுப்போய்விடுகிறதாம். சம்பளம் சரியாக வராததால் கோயில் சிப்பந்திகளே தேங்காயைப் பிடுங்கிச் சென்று விடுவதாகச் சிலர் கூறுகிறார்கள்.

**திருச்செந்துறை :**

இந்த ஆலயத்தில்பணிபுரிகிறசிப்பந்திகளுக்குச் சரியாகச்சம்பளம் கொடுக்கப்படாமல் ஆண்டுக் கணக்கில் பாக்கி இருக்கிறது. ஊழியர்களுக்குப் பரம்பரையாக வழங்கப்பட்டு வந்த பட்டை சாதத்தை நிறுத்திவிட்டார்கள். அர்ச்சனை பங்குத்தொகை பாக்கி நிற்கிறது. விழாக்கால சன்மானம் நிறுத்தப்பட்டுவிட்டது. ஆலய ஊழியர்கள் மனுவாகத் தயாரித்து தங்கள் குறைகளை அரசுக்குத் தெரிவித்திருக்கிறார்கள்.

மிகப்பெரிய ஒரு சிவஸ்தலம் எப்படிச் செயலிழந்து கிடக்கிறது என்பதைப் பார்ப்போம். திருவானைக்கா திருக்கோயிலைப் போல் தோற்றமளிக்கும் இந்தப் பெரிய கோயிலின் முன் மண்டபவாசலிலோ கோபுரத்திலோ, பிரதானகோயில்பிராகாரத்தின் நுழைவு வாசலிலோ கோயில் மண்டபத்திலோ மின்சார விளக்குகள் எரியாமல் இருண்டு கிடக்கின்றன. களையிழந்து காணப்படும் இந்தக் கோயிலின் பூஜைகள், விழாக்கள் சரியாக நடைபெறுகின்றனவா? என்று விசாரித்தோம். வேதனை அளிக்கும் பதில்கள்தான் கிடைத்தன.

சாமி சிலைகளுக்குத் துணிகள்கூட வாங்கி அணிவிக்கவில்லை. விக்ரகங்களுக்கு எண்ணெய் தடவக்கூட வழியில்லை. விஸ்வரூப தரிசனம் நின்றுபோய் விட்டது. 50 ரூபாய் செலவில் நடத்துகின்ற ஆடிப்பூர விழாகூட நடத்த முடியவில்லை. 10 நாட்கள் சிறப்பாக நடைபெற்றுவந்த பிரமோற்சவ விழாவும் ஆவணி மூலம் விநாயக சதுர்த்தி நவராத்திரி சோமவார உற்சவம் திருக்கார்த்திகை

திருவாதிரை, மாட்டுப்பொங்கல், தைப்பூச விழாக்கள் எல்லாம் கோயிலில் இப்போது நடைபெறுவது இல்லை. 15 ஆண்டுகளாகப் பிரமோற்சவம் நின்றுபோய்விட்டது. வாகனங்கள் வீதி உலா வருவதில்லை. விதவிதமான வாகனங்கள் இருந்துங்கூட அது வீதியில் வருவதை மக்கள் பார்த்ததில்லை.

விழாக்கள் எல்லாம் நின்றுபோய்விட்டதால் ஆசாரி, கொல்லன், தச்சன் ஆகிய தொழிலாளிகளின் வருமானம் போய்விட்டது.

தாருகாவனேஸ்வரர் ஆலயத்திற்கென்றே பசுமடம் (பண்ணை) வைத்து அதில் காராம்பசுக்களை வளர்த்து, பால் கறந்து அதனை அபிஷேகம் செய்து 6 கால பூஜை நேரங்களிலும் பக்தர்களுக்கு வழங்கி வந்ததும், அந்தப் பால் எத்தனையோ ஏழைக் குடும்பங்களின் குழந்தைகளுக்கு உணவாக விளங்கி வந்ததும், காலை பூஜைமுடித்து, பிறகு பிச்சைக்காரர்களுக்கு காலை சந்தி உணவு அளிக்கப்பட்டு வந்ததும் பழங்கதையாகிவிட்டது. இந்தப் பத்து அல்லது பதினைந்து ஆண்டுகளில் கோயில் சொத்துக்கள் எப்படிப் பயன்படாமல் ஒரு சிலரிடம் போய் சிக்கிக்கொண்டன என்பதைத்தான் இந்த இழிநிலைமை எடுத்துக்காட்டுகிறது. குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டத்தின் பின்னாலும் கடன் நிவாரணச் சட்டத்தின் பின்னாலும் இவர்கள் பதுங்கி நிற்கிறார்கள். இந்த நிலைமைகளைக் கண்டு உள்ளம் பொருமுகின்ற ஆன்மிகவாதிகள் ஆலயப் பாதுகாப்பு மாநாடு ஒன்றுகூடித் தீர்மானம்போடத்தான் முடிகிறது. கோயில் சொத்துக்களை அரசாங்கச் சொத்துக்களைப்போல் கண்காணித்துப் பாதுகாக்கவேண்டியபொறுப்பு அரசாங்கத்திடந்தான் இருக்கிறது.

ஜீயபுரம் மெயின் ரோட்டில் திருச்செந்துறையில் காவிரிக்கரை மீது பழமையின் சின்னமாக நிற்கும் ஸ்ரீ சந்திரசேகர சுவாமி கோயிலைப் பாதுகாக்க எவரும் முன்வரவில்லை. இரண்டு பிராகாரத்துடன் கலை வேலைப்பாடு அமைந்தராஜகோபுரத்தையும், அற்புதமான சிற்ப வேலை அமைந்த விமானத்தையும் கொண்டிருக்கின்ற ஆயிரம் ஆண்டுகளுக்கும் முந்திய இந்தக் கோயிலைச் சோழ அரசி ஒருத்தி கட்டியதாகக் கல்வெட்டு கூறுகிறது.

கலைத்திறன் மிக்க ராஜகோபுரம் இடிபாடாகச் சரிந்துவிழும் நிலையில் பழுதுபட்டு நிற்கிறது: இந்தக் கோபுரத்தின்மீது செடிகள் முளைத்துக் கிடக்கின்றன. உள்ளே நுழையும்போதே தலையில் இடிந்து விழுந்து விடுமோ என்ற அஞ்சவேண்டிய நிலையில் இருக்கிறது. திருக்கோபுரத்தின்மீது இருக்கும் வேலைப்பாடு மிக்க பதுமைகள் எல்லாம் கை இல்லாமலும், தலை இல்லாமலும், கால் இல்லாமலும் சிதைந்துபோய் புராதனச் சின்னமாகத் தோன்றுகிறது.

இந்தக் கோபுரம் இடிந்து விழுந்துவிடாமல் பாதுகாப்பதற்காக 3 இடங்களில் தாங்குகிற பாதுகாப்புச் சுவர்கள் கட்டியிருக்கிறார்கள். கட்டி 40 ஆண்டுகள் ஆகிவிட்ட இந்தச் சுவரே இற்றுப்போய் இடிந்துவிழுகின்ற நிலைக்குப்போய்விட்டது. ஆனால் ராஜகோபுரத்தைச் செப்பனிட இன்னும் வழி பிறக்கவில்லை. இந்தக் கோயிலின் இழிநிலையைப் பார்க்கும்போது உண்மையான பக்தர்களின் விழிகளில் நீர் திரையிடுகிறது.

இந்தக் கோயிலுக்கும் 12 ஏக்கர் அருமையான நன்செய் நிலம் இருக்கிறது. இந்த நிலம் 4 பேரிடம் இருக்கிறதாம். இவர்களில் ஒருவர் மட்டுமே குத்தகை நெல்லைத் தவறாது கொடுத்து வருகிறார். மற்றவர்கள் கோயில் நிலங்களில் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு வசதியாக வாழ்ந்துவருகிறார்கள். இரண்டு வேளை மணி அடித்துப் பூஜை செய்வதோடு கோயில் நடந்துவருகிறது. இடிந்து விழத் தயாராக இருக்கும் கோபுரத்தைப் புதுப்பிப்பதற்கு வருமானம் எங்கே இருக்கிறது. கடவுள் தான் கண்திறக்கவேண்டும்.

81 ஏக்கர் நிலத்திற்குச் சொந்தமான திருப்பராய்த்துறை ஸ்ரீ தாருகாவனேஸ்வரர் கோயிலுக்கு ஆண்டுக்கு ஒரு லட்ச ரூபாய் வருமானம் இருந்துங்கூட அந்தக் கோயிலின் நிர்வாக அதிகாரிக்குச் சம்பளம் கொடுக்கக்கூட வழியில்லாமல் வேறு கோயிலுக்கு மாற்றிவிட்டார்கள். அப்படியிருக்க ஆண்டுக்கு 10 ஆயிரம் ரூபாய் வருமானம் வருகின்ற இதுபோன்ற சிறிய கோயிலின் கோபுரத்தைப் புதுப்பிக்க வழி என்ன இருக்கிறது ? இந்தச் சிறிய கோயிலுக்கு நிர்வாக அதிகாரியை நியமிக்கச் சம்பளத்திற்கு எங்கேபோவது ?

காவிரிக்கரை ஓரங்களில் சொத்துக்களும் வருமானமும் இல்லாத காரணத்தினால் கவனிக்க ஆளின்றி, விளக்கு எரியாமல் இடிபாடுகளாகப் புதர்மண்டிக்கிடக்கும் ஏராளமான கோயில்கள் அனாதையாய் நிற்கின்ற அவல நிலை மாறுவது எந்நாளோ ?

நன்றி ! — தினமலர், 25—6—78.

# காசினிக் கீரை

## (CICHORIVM INTYBUS)

**திரு. மு. விட்டல்** எம்.எஸ்ஸி., (வேளாண்மை)

பார்ப்பதற்கு இது முள்ளங்கி இலையைப்போல் சிறிய வடிவில் இருக்கும். இது காப்பியுடன் கலக்கும் சிக்கரி இனமாகும் சிக்கரி இலையும், காசினிக் கீரையும் ஒன்றுபோலவே இருக்கும்.

வட ஆற்காடு போன்ற மாவட்டத்தே சிலர் காசினிக் கீரையைப் புளிச்சக்கீரை (கோகு) என்று தவறுதலாக வழங்குகின்றனர்.

**சத்தும், மருந்தும், குணங்களும் :-**

இதர கீரையைப் போன்றே சத்துக்களைப் பெற்றிருப்பினும், இதன் இலையில் நீர் [ஈரம்] அதிகமாக உள்ளது. இதனைப் பருப்புடன் சேர்த்துப் பாகப்படி கடைந்துண்ண இரத்த விருத்தியை உண்டாக்கும். இரத்தத்திலுள்ள மாசுகளை நீர்வழியாக நீக்கி, வீக்கம் இருப்பினும் வாடச் செய்யும். உடல்சூட்டைத் தணிக்கும்.

காசினி விதையைச் சர்பத்துடன் சேர்த்துப் பருகுவர்.

**அடங்கியுள்ள சத்துக்கள் :-** (100 கிராமில்)

| | | | |
|---|---|---|---|
| ஈரம் | 96·2 கிராம் | சுண்ணாம்பு | 94 மி. கி |
| புரதம் | 1·6 ,, | பாஸ்பரஸ் | 21 ,, |
| கொழுப்பு | 0·7 ,, | இரும்பு | 8 ,, |
| தாதுப்பொருள் | 1·6 ,, | | |

**பருவம்:-**

எல்லாப் பருவங்களிலும் இதனைப் பயிரிடலாம்.

**நிலம் தயாரித்தல்:-**

நிலத்தை நான்கு ஐந்து முறை உழுது நன்கு புழுதியாக்க வேண்டும். இரண்டு (அ) மூன்றும்முறை உழுகையிலே எக்டருக்கு

25 டன் மக்கிய தொழு உரம் (அ) கம்போஸ்ட் இட்டு உழுதல் வேண்டும். பிறகு கடைசி உழவுக்குமுன் எக்டருக்கு 125 கிலோ அமோனியம் சல்பேட், 300 கிலோ சூப்பர் பாஸ்பேட், 60 கிலோ முரியேட் ஆப் பொட்டாஷ் இட்டு உழுது நிலத்தை 4' அகலமுள்ள பாத்திகளாகப் பிரித்தல்வேண்டும். நிலத்திற்கேற்பவும், நீர்பாயும் தன்மைக்கேற்பவும் பாத்தியின் நீளம் மாறுபடுமாயின் 6 அடி நீளம் சாலச் சிறந்ததாகும். (6' × 6')

**விதையும், விதைத்தலும் :-**

இதன் விதை தண்டுக் கீரை விதையைப்போல் இருக்கும். ஆயின் கருப்பாக இருக்காது. வெளிறிய நிறத்தில் இருக்கும் (இளங்காவி நிறம்). ஒரு எக்டருக்கு 3 கிலோ விதை தேவை. விதையைப் பாத்தியில் பரவலாக விதைக்கின்றனர். அவ்வாறின்றி வரிசைக்கு வரிசை சுமார் 8 செ. மீ. அளவு இருக்கலாம்.

**நீர்பாய்ச்சலும், பின்நேர்த்தியும் :-**

களைகள் வளர ஒட்டாமல் களை எடுத்தல் வேண்டும். விதைத்ததும் ஒருமுறை நீர்பாய்ச்சி, பிறகு மூன்றுநாள் உயிர்நீர் இறைத்தல் வேண்டும். நிலத்திற்கு ஏற்ப ஒரு வாரத்திற்கு ஒருமுறையோ 5 நாட்களுக்கு ஒருமுறையோ நீர் பாய்ச்சப்படுகிறது.

**அறுவடை :-**

காசினிக் கீரையை நான்கைந்து மாதங்கள் வயலில் வைத்திருக்கலாம். முதல் அறுவடை விதைத்த 30 (அ) 35 நாளில் அறுக்கலாம். அப்போது கீரை சுமார் 15 — 20 செ. மீ. உயரம் வளர்ந்திருக்கும். பூமியில் இருந்து ஒன்று (அ) இரண்டு சென்டி மீட்டர் உயரம் விட்டு அறுத்து, கத்தையாகக் கட்டிவிற்பர். பிறகு இரண்டாம்முறையாக முதல் அறுப்பு முடிந்த 10 (அ) 13 நாளில் அறுக்கலாம். இவ்வாறு நட்ட பிறகு 5 மாதம் வரை கீரை அறுக்கலாம்.

**மகசூல் :-**

ஒரு எக்டரில் ஒரு அறுப்பில் சுமார் 2,10,000 கத்தைகள் கிடைக்கும். ஒருகத்தை சுமார் 3 பைசா விலைக்குப்போகும்.

# ஆலய நிதியை முறைப்படுத்தி பயன்படுத்தச் சட்டம் வரும்

[ தமிழ்நாடு அரசு அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு ஆர். எம். வீரப்பன் அவர்கள் தஞ்சை நிருபர்களிடையே கூறிய கருத்துக்கள் இக்கட்டுரை. ]

ஆலய நிதிகளைச் சிறப்பாகவும் முறையாகவும் பயன்படுத்துவதற்குத் தேவைப்பட்டால் புதிதாக மாநில அரசு சட்டம் இயற்றும்.

**ஆலயங்கள் பாதுகாப்பு :**

அப்படி ஒரு சட்டத்தை இயற்றுவதற்குமுன்னால், இப்பொழுது இருக்கும் சட்டத்திலுள்ள ஓட்டைகளிலும் நிதிகள் பயன்படுத்தும் முறைகள் பற்றியும் அதனால் ஏற்படும் சட்டப்பிரச்னைகள் பற்றியும் அரசு தீவிரமாகப் பரிசீலனைசெய்து புதியசட்டம் அர்த்தமுள்ள நியாயமான சீர்திருத்தங்களை அனுமதிப்பதுடன் ஆலயநிதிகள் வேறு பல காரியங்களுக்காகத் துஷ்பிரயோகம் செய்வதைத் தடுக்கக்கூடியதாகவும் இருக்கும். ஆலய நிலங்களிலிருந்து நியாயமாக வரவேண்டிய அல்லது எதிர்பார்க்கின்ற வருமானம் இதுவரை ஆலயங்களுக்குக் கிடைக்கவில்லை. ஆலயங்களின் நலம் தி. மு. க. ஆட்சியில் முழுவதுமாகப் புறக்கணிக்கப்பட்டுவிட்டது. இந்த அவலநிலை ஆலயங்களில் மேலும் தொடர்ந்து இருக்குமானால் ஒவ்வொரு ஆலயமும் வெகு விரைவில் செயல்படாமல் நினைவுச் சின்னங்களாகவே மாறிவிடும். இந்த ஆலயங்களை மீண்டும் நல்ல முறையில் செயல்படச்செய்ய வேண்டும். அப்படிச் செய்யாமல் இருந்தால் தமிழ்நாட்டின் கலாச்சாரத்தை நாம் இழப்பதுமட்டும் அல்லாமல் தமிழனுக்கே உரிய அரும் கலைகள் என்று சொல்லக்கூடிய நாதஸ்வரம் நாட்டியம் சிற்பம் முதலியவைகளும் தமிழ்நாட்டிலிருந்து அழிந்துவிடும். பின்வரும் தலைமுறையினரின் நலன்கருதியாவது மக்கள் நமது பெருமைவாய்ந்த ஆலயங்களைக் காக்கவேண்டும்.

தஞ்சை மாவட்டத்தைப் பொருத்தவரையில் அதிக அளவில் கலைப்பெருமை வாய்ந்த ஆலயங்கள் இருக்கின்றன. இந்த ஆலயங்களில் பெரும்பகுதி நிலவருமானத்தை நம்பி இருக்கின்றன. எந்த ஆலயத்திற்கும் நிலத்திலிருந்து கிடைக்கவேண்டிய வருமானம் ஒழுங்காகக் கிடைக்கவில்லை. கடந்த 25 ஆண்டுகளில் அநேக நிலச்

சீர்திருத்தச் சட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கின்றன. துரதிஷ்ட வசமாக ஏற்படுத்தப்பட்ட நிலச்சீர்திருத்தச் சட்டங்கள் ஆலயத்தின் முன்னேற்றத்தைப் பாழ்படுத்திவிட்டன. அகில இந்திய அண்ணு தி. மு. க. அரசைப் பொருத்தவரையில் புராதன நினைவுச்சின்னங் களான இந்த ஆலயங்களைப் பாதுகாப்பதில் அக்கறைகொண்டிருக் கிறது. ஆனுல் இதை எப்படிச் செய்வதென்பதுதான் இன்றுள்ள பிரச்சினை. நல்லநோக்கத்தில் எந்தக்காரியத்தைச் செய்தாலும் இப் போது அதற்கு அரசியல் சாயம் பூசப்படுகிறது. பாழடைந்துவரும் ஆலயங்களை எப்படிப் பாதுகாப்பதென்பதே இப்போதுள்ள பிரச்சினை.

**ஆலயங்கள் சொத்து :**

தஞ்சையைப் போன்ற மாவட்டங்களில் ஆலயங்களுக்குச் சொந்தமான நிலவருவாய் முறையாகக் கிடைத்தால்தான் ஆலயங்கள் பாழ்படாமல் பாதுகாக்கப்படும். ஆலய வருமானத்தைக் கபளீகரம் செய்பவர்கள், நெற்றிவேர்வை நிலத்தில்விழப் பாடுபடும் லட்சக் கணக்கான தொழிலாளர்கள் அல்ல ; விரல்விட்டு எண்ணக்கூடிய சுயநலங்கொண்ட பெரிய மிராசுதார்களே ஆலய வருமானத்தைக் கபளீகரம் செய்கிருர்கள். ஆனுல் தங்களுடைய கபளீகரத்தை மறைக்க நிலச்சீர்திருத்தச் சட்டங்களிலுள்ள சந்துபொந்துகளிலும் ஓட்டைகளிலும் புகுந்துகொண்டு பினுமியாக எல்லா நடவடிக்கை களையும் செய்கிருர்கள். தற்சமயம் அரசு பண்ணைத்தொழிலாளர்க ளுக்குப்பாதகம் ஏற்படாமலும் அதேநேரத்தில் ஆலயவருமானத்தைப் பெரும் மிராசுதார்கள் கபளீகரம்செய்ய இயலாமலும் ஓர் சட்டத்தை இயற்ற ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறது. ஆலயங்களில் நில வருமானம் விரல்விட்டு எண்ணக்கூடிய சக்தி வாய்ந்த சில பெரிய மிராசுதார்களால் எப்படியெல்லாம் கபளீகரம் செய்யப்படுகிறதென் பதைப் பொதுமக்கள் நன்குணரும்படியாகச்செய்து பொதுமக்களின் ஒத்துழைப்புடன் அரசாங்கம் ஆலயத்தைப்பாதுகாக்க விரும்புகிறது.

நாட்டிலுள்ள ஆஸ்திகசமாசங்களும் இதர சமயஸ்தாபனங்களும் கிருபானந்த வாரியார் போன்ற பிரமுகர்களும் எந்த அளவிற்குப் பக்தியைப் பிரசாரம் செய்வதில் ஆர்வம் காட்டுகிருர்களோ அதே அளவிற்கு, ஆலய நிதிகள் எப்படி எப்படியெல்லாம் தவருகப் பயன்படுத்தப்படுகிறது ; ஆலயநிலங்கள் எந்த விதத்தில் பினுமி நடவடிக்கைகளின் காரணமாக வருமானம் இல்லாமலிருக்கின்றன ; இவைகளைத் தடுத்து எப்படி ஆலய வருமானத்தை அபிவிருத்தி செய்வது என்பதைப் பற்றியும் மக்கள் மத்தியில் பிரசாரம் செய்ய வேண்டும். இத்துறையில் கிருபானந்தவாரியார் தனது சொற்பொழிவு களில் பிரசாரம்செய்து அரசுடன் ஒத்துழைக்க முன்வந்தால் சில

அரசியல் கட்சிகள் மேற்கொள்ளும் அரசியல் சாயம் வெளுத்து விடும். மத்திய தொல்பொருள் இலாகாவையும் தஞ்சை நகர மன்றத்தையும் கலந்துகொண்டு மாநில அரசு உலகப்பிரசித்திபெற்ற கலைச்செல்வமாக விளங்கும் தமிழனின் கட்டிடக்கலைத் திறமைக்குச் சான்றாக இருக்கும் தஞ்சை பெரியகோவிலுக்கு விஜயம் செய்யும் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான வசதிகளைச் செய்துகொடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

நன்றி! தினமலர், 24—7—78.

# வெயில்மூலம்
# காரில் "குளுகுளு" வசதி

கோடைகாலத்தில் காரில் போனால் தகிக்கும் அல்லவா? சூரியவெப்பத்தைப் பயன்படுத்தி, காரினுள் "குளுகுளு" வசதி செய்யும் முறையை ஜப்பான் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர் கண்டுபிடித்திருக்கிறார்.

'காஸ்' திரவவடிவில் மாறும்போது சுற்றிலுமுள்ள வெப்பத்தைக் கிரகித்துக்கொள்கிறது என்பதை அடிப்படையாகக் கொண்டு, போஷியாகி சின்ஜி (வயது 46) என்ற அந்த ஆசிரியர் இப்புதிய முறையைக் கண்டுபிடித்துள்ளார். ஜப்பான் கம்பெனியும் தனது கார்களில் இதைப் பயன்படுத்த இருக்கிறது.

காரின்மீது தண்ணீர்க்குழாய் அமைக்கப்படுகிறது. சூரிய வெப்பத்தில் தண்ணீர் சூடாகிறது. சூடான தண்ணீர் காரினுள் ஒரு பெட்டிக்கு அனுப்பப்படுகிறது. சூடான தண்ணீர் திரவவடிவில் உள்ள அம்மோனியாவை ஆவியாக்குகிறது. இது மீண்டும் திரவமாகமாறும்போது காரினுள் உள்ள வெப்பத்தைக் கிரகிக்கிறது. இதனால் காருக்குள் "குளு குளு" என்று இருக்கும். (ஜப்பான் செய்திகள்.)

— தினமணி, 3—7—78.

# கோயிலுக்குச் சொந்தமான கடையை வாடகைக்காரர் வேறு ஒருவருக்கு மாற்றிக் கொடுக்க ரூ. லட்சம்

[ திருச்சி தினமலர் நிருபர்களிடையே தமிழ்நாடு அரசு அறநிலையத்துறைஅமைச்சர்மாண்புமிகு ஆர். எம். வீரப்பன் அவர்கள் கூறிய கருத்துக்கள். ]

இந்து அறநிலையத்துறையின்கீழ் இருந்துவரும் கோவில்களில் நடைபெற்றுவரும் தவறுகள் பயங்கரமான குகைக்குள் நடப்பதுபோல் இருக்கின்றன. எங்கே தவறுகள் இருக்கின்றன? எங்கே இல்லை? என்று கண்டுபிடிக்க முடியாத அளவு முழுவதும் தவறுகளும், ஊழல்களும் மலிந்து கிடக்கின்றன. தவறுகள் எங்கே என்று கண்டு பிடிப்பதற்கு முன்னால் அந்தப் பயங்கரமான குகைக்குள் விளக்கை ஏற்றி வெளிச்சம் ஏற்படுத்தத் தமிழக அரசு முயன்றுவருகிறது.

**அறங்காவலர்கள்:**

அறநிலையச் சொத்துக்கள் குறித்து இப்போதுள்ள சட்டத்தில் தவறு செய்பவர்களைத் தண்டிக்க இடமில்லை. கோயில் சொத்துக்களை மோசடி செய்கிறவர்கள்மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்க வழி இல்லை. தவறுகள் வளருவதற்கு இதுதான் காரணமோ என்று எண்ணத் தோன்றுகிறது. கோயில் சொத்துக்களைக் கண்காணிக்கத் தான் அறங்காவலர்கள் நியமிக்கப்படுகிறார்கள்; ஆனால் அவர்களே தங்கள் இஷ்டம்போல் சம்பாதித்துக்கொள்ளச் சென்ற (தி. மு. க.) ஆட்சியில் அனுமதிக்கப்பட்டது. தவறுகள் கட்டுப்படுத்தப்பட வில்லை. சட்டத்தில் இருக்கும் சாதகத்தைப் பயன்படுத்திக்கொண்டு தாங்களும் சேர்ந்து தவறுசெய்தார்கள்.

ஆனால் இன்றைய அ. அ. தி. மு. க. அரசு இதனைத் தடுத்து நிறுத்துவதில் உறுதி பூண்டுள்ளது. அரசுமட்டும் இதனைச் செய்து விட முடியாது. மக்கள் இந்தப் பிரச்சனையை எடுத்துக்கொள்ள வேண்டும். திருக்கோயில் சொத்துக்களைக் கொள்ளையடிப்போரைக் கண்காணிக்கவேண்டும். சமூக விரோதிகளாகக் கருதவேண்டும்.

கோயில் நிலங்களுக்குக் கடன் நிவாரணச் சட்டத்திலிருந்தும், குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டத்திலிருந்தும் விதிவிலக்கு அளிக்க

வேண்டும் என்று கோரிக்கை எழுந்துள்ளது. இதுபற்றி அரசு பரிசீலனை செய்து முடிவெடுக்கும். இதுபோல் அறநிலையக் கடைகளுக்கும் வாடகை கட்டுப்பாடு சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிப்பதுபற்றி அரசு விரைவில் உறுதியான முடிவை மேற்கொள்ளும்.

அறங்காவலர்களை நியமிப்பதற்காக, தாலூகாமட்டத்தில் ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்படும். பொதுநல நோக்கமும், கடவுள் பக்தியும் கொண்டவர்கள் அறங்காவலர்களாக நியமிக்கப்படுவார்கள்.

**ரூபா ஒரு லட்சம் :**

திருச்சி மலைக்கோட்டை கோயிலுக்குச் சொந்தமான ஒரு கடையை மற்றொருவருக்கு மாற்றிக்கொடுக்க பகடியாக (குட்வில்) அந்தக் கடைக்காரர் ஒரு லட்சம் ரூபாயை மற்றவரிடம் வாங்கியிருக்கிறார். நேரடியாக அப்படி மாற்றிக் கொடுக்க முடியாது என்பதால் அவரைச் சட்டப்படி முதலில் அந்தக்கடையின் பங்குதாரர் ஆக்கி, பிறகு பங்குதாரருக்குக் கடையை மாற்றிக்கொடுப்பதுபோல் கொடுத்திருக்கிறார்கள். கோயில் கடையை வைத்து யார் சம்பாதிக்கிறார்கள் பார்த்தீர்களா ?

சென்னையில் தேனாம்பேட்டை எல்டாம்ஸ் ரோட்டில் உள்ள ஒரு கோயிலின் பின்பக்கத்தில் கடைகளைக்கட்டி (மார்க்கெட்போல) அதனை ஏலத்தில் விட்டிருக்கிறார்கள். கடைகளை வாடகைக்கு எடுத்தவர்கள் மார்க்கெட்டுக்குள் கடைகளை வைக்காமல் ரோட்டின் இருபுறமும் வெளியே கடைகளைவைத்து, போக்குவரத்தை அடியோடு தடுத்து விட்டார்கள். இதனால் வாகனங்கள் எதுவும் போக முடியவில்லை. ஒரு கர்ப்பிணிப்பெண் ஆஸ்பத்திரிக்கு வண்டியில் கொண்டு செல்லப்பட்டபோது ரோட்டில் கடைகள்வைத்து வண்டி செல்ல முடியாமல் போய்விட்டதால் அந்தப்பெண்ணை இறக்கி நடத்திச் சென்றிருக்கிறார்கள். ஆஸ்பத்திரிக்குச் செல்லுவதற்குள்ளே அந்தக் கர்ப்பிணிப்பெண் இறந்துபோய்விட்டாள். ரோட்டில் கடைவைத்திருப்பவர்கள் கோயிலின் பின்பக்கத்தில் கட்டியிருக்கும் கடைகளில் குடியிருக்கிறார்கள். உள்ளே புக முடியாத அளவுக்கு அதனை அசுத்தப்படுத்தி வைத்திருக்கிறார்கள்.. நடக்கக்கூடாத எல்லாத் தவறுகளும் இந்தக் கோயிலின் பின்புறத்தில் நடைபெற்றுவருகிறது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இந்தக் கோயிலில் இருந்த சிலை ஒன்று திருட்டுப்போய்விட்டதாகத் தகவல் கிடைத்தது. அதுபற்றி விசாரித்தபோது சிலைதிருட்டுப்போகவில்லை; சிலையில் இருந்த கிரீடம் மட்டுந்தான் திருட்டுப்போயிருக்கிறது என்று அக்கோயில் குருக்கள் கூறினர். எப்படித் திருட்டுப்போனது என்று விசாரித்தபோது, அதற்குப்பதிலாக நானே வேறுகிரீடம் செய்துகொடுத்துவிடுகிறேன்

என்று குருக்கள் கூறியிருக்கிறார். ஆனால் இதுவரை கிரீடம் வந்து சேரவில்லை. இப்படியெல்லாம் தவறுகள் நடைபெறுகின்றன.

கோயில்களை நாத்திகர்கள் ஒழிக்கத்தேவையில்லை. கோயில்களைக் காப்பதாகக் கூறிக்கொள்ளும் சில ஊழல்காரர்களேபோதும். கடவுள் பக்தி பெருகிவரும் இந்நாளில் அதற்கேற்ப ஆலயங்களைத் தூய்மைப் படுத்தவேண்டாமா?

புகழ்பெற்ற மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் இதுவரை குடிக்கத் தண்ணீர் இல்லாத நிலையில்தான் இருந்தது. இதனைக் கவனிக்க வேண்டாமா? இப்போதுதான் உடனடியாகக் குடிநீர் கிடைக்க நடவடிக்கை எடுத்திருக்கிறோம். இதனைச் செய்யக் கோயிலுக்கு வருமானம் வேண்டாமா? மக்கள் சென்று வழிபடுகின்ற கோயில்கள் எப்படி இருளடைந்து கிடந்தால் என்ன என்று விட்டு விடமுடியுமா? எத்தனையோ கோயில்களில் விளக்குப்போட எண்ணெ வாங்கக்கூட வருமானம் இல்லாத நிலைமை இருந்து வருகிறது. இதனை மாற்றி அமைக்க அரசு படிப்படியாக நடவடிக்கைகளை எடுக்கும்.

நன்றி. — தினமலர் 17—6—78.

---

## தியானம் செய்ய அதிசய கருவி

மனிதன் ஆழ்ந்து தியானம் செய்வதற்கு உதவிட ஒரு கருவியை ஜப்பானில் உள்ள ஷிமாஜு மின்சாதன கம்பெனி தயாரித்துள்ளது.

பேட்டரியில் இயங்கும் "கண்ட்ரோலிங் யூனிட்" உப்புத்தண்ணீரில் தோய்க்கப்பட்ட மிருதுவான எலக்டிராடுகள் இரண்டு பொருத்தப்பட்ட தலைப்பட்டை, இரு காதுகருவிகள் ஆகியன இந்தச் சாதனத்தில் அடங்கியுள்ளன.

தியானம் செய்ய விரும்பும் மனிதனின் மூளை அதிர்வு அலையை எலக்டிராடுகள் கண்ட்ரோலிங் யூனிட்டுக்கு அனுப்புகின்றன. அவற்றிலிருந்து 'ஆல்பா அலை' எனப் படுபவற்றை கண்ட்ரோலிங்யூனிட் பிரித்து, காது கருவிக்கு அனுப்புகிறது. இந்தமுறை மனிதன் ஆழ்ந்து தியானம் செய்ய உதவுகிறது. (ஜப்பான் செய்திகள்.)

— தினமணி, 3—7—78.

# உருத்திராக்ஷத்தின் தோற்றமும் அதன் பெருமையும்

பிரவசனரத்நம், வியாகரணசிரோமணி, இந்திவிசாரத்,

**திரு. P. S. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்**

( மலர் 37, இதழ் 7, பக்கம் 324 இன் தொடர்ச்சி )

### பத்து முகம்

இது ஜனார்தன (விஷ்ணு) ஸ்வரூபமாகும். இதை அணிவதாலும், இதன் மாலையால் ஓம் ச்ரீம் ஹ்ரீம் க்லீம் வ்ரீம் ஓம் என்ற மந்திரத்தை ஜபம் செய்வதாலும் எல்லா நவக்கிரகங்களும் சாந்தமாகின்றன. பூதம், பிசாசம், பிரும்ம ராக்ஷஸம், ஸர்ப்பம் முதலிய விஷ ஜந்துக்களால் பயம் ஏற்படாது. எண்ணம் நிறைவேறும்.

### அணியும் முறை

ஓம், ச்ரீம், ஹ்ரீம், க்லீம், வ்ரீம், ஓம் என்பது மந்திரம்.

அஸ்ய ஸ்ரீ ஜனார்தன மந்த்ரஸ்ய நாரத ரிஷி : அனுஷ்டுப்சந்த: ஜனார்தனோதேவதா| ச்ரீம் பீஜம்| ஹ்ரீம் சக்தி:| அபீஷ்டசித்யர்த்தே ருத்ராக்ஷ தாரணார்த்தே ஜபே விநியோக : | நாரத ரிஷயே நம : சிரஸி | அனுஷ்டுப் சந்தஸே முகே | ஜனார்தன தேவதாயை நமோ ஹ்ருதி | ச்ரீம் பீஜாய நமோ குஹ்யே | ஹ்ரீம் சக்தயே நம: பாதயோ : |

### கரநியாசம்

ஓம் ஓம் அங்குஷ்டாப் யாம் நம: | ச்ரீம் தர்ஜநீப்யாம் ஸ்வாகா | ஓம் ஹ்ரீம் மத்யமாப்யாம் வஷட் | ஓம் அநாமிகாப்யாம் ஹூம் | வ்ரீம் கநிஷ்டிகாப்யாம் வௌஷட் | ஓம் ஓம் கரதலகர ப்ருஷ்டாப் யாம் பட்.

### அங்கநியாசம்

ஓம் ஓம் ஹ்ருதயாய நம :| ஓம் ச்ரீம் சிரஸேஸ்வாஹா | ஓம் ஹ்ரீம் சிகாயை வஷட் ஓம் ஹ்ரீம் கவசாயஹூம், ஓம் வ்ரீம் நேத்ரத்ரயாய வௌஷட், ஓம் ஓம் அஸ்த்ராயபட்.

## தியானம்

விஷ்ணும் சாரத சந்த்ரகோடி ஸத்ருசம் சங்கம் ரதாங்கம் கதாம்
அம்போஜம் ததகம் ஸிதாப்ஜ நிலயம் காந்த்யா ஜகந்மோஹநம்
ஆபத்தாங்கத ஹார குண்டல மஹா மௌளிஸ்புரத் கங்கணம்
ஸ்ரீவத்ஸாங்க முதார கௌஸ்துபதரம் வந்தே முனீந்த்ரைஸ் ஸ்துதம்.

கோடி சரத்கால சந்திரர்களுக்கு ஒப்பாயும், சங்கு சக்ரம் தாமரை இவைகளைத் தரித்துக்கொண்டும், வெண்டாமரையில் இருந்துகொண்டும், காந்தியால் ஜகத்தை மயங்கச்செய்பவராயும், கேயூரம் முத்து மாலை காதணிகள் மிகச்சிறந்து விளங்குகின்ற வளையல்களையும் ஸ்ரீவத்ஸம் என்ற அடையாளத்தையும் கம்பீரமான கௌஸ்துபத்தையும் அணிந்தவரும் முனிவர்களால் புகழப்பட்டவராயுமுள்ள விஷ்ணுவை வணங்குகிறேன்.

## பதினொருமுக ருத்திராக்ஷம்

இதன் பதினொருமுகங்களும் பதினொருஉருத்திரர்களின் அதாவது கபாலி பிங்கள பீமவிருப்ாக்ஷ விலோகித சாஸ்தா அஜபாத அஹிர் புத்ந்ய சம்பு சண்ட பவ என்பவர்களின் ஸ்வரூபமாகும். இதைச் சிகையில் அணிவதால் ஆயிரம் அச்வமேத யாகப்பயன் கிட்டுகிறது. வாஜ்பேய யாகத்தின் பயனும் ஏற்படும். சந்திரகிரஹண காலத்தில் செய்யும் தானத்தின் பயனுண்டாகும். இதன் மாலையை அணிந்து கொள்வதாலும் இதன் மாலையால் ஓம் ஓம் ரூம் மூம் யூம் ஔம் என்ற மந்திரத்தை ஜபம் செய்வதாலும் முகம் மிகவும் ஒளிபொருத்தியதாகவும் கவர்ச்சிகரமாகவும் ஆகும்.

## அணியும் முறை

ஓம் ரூம் மூம் யூம் ஔம் என்பது மந்திரம்.

அஸ்ய ஸ்ரீருத்ர மந்த்ரஸ்ய கச்யப ரிஷி:| அனுஷ்டுப் சந்த:| ருத்ரோ தேவதா| ரூம் பீஜம்| க்ஷ்ம் சக்தி:| அபீஷ்டசித்யர்தே ருத்ராக்ஷ தாரணர்த்தே. ஜபே விநியோக:| கச்யபரிஷயேநம: சிரஸி | அனுஷ்டுப் சந்தஸேநம: முகே ருத்ரதேவதாயை நமோ ஹ்ருதி| ரூம் பீஜாய நமோ குஹ்யே, க்ஷ்ம் சக்தயே நம: பாதயோ:

## கரந்யாசம்

ஓம் ஓம் அங்குஷ்டாப்யாம் நம:
ஓம் ரூம் தர்ஜநீப்யாம் ஸ்வாஹா

ஓம் க்ஷௌம் மத்யமாப்யாம் வஷட்
ஓம் ஹூம் அநாமிகாப்யாம் ஹூம்
ஓம் யூம் கநிஷ்டிகாப்யாம் வௌஷட்
ஓம் ஔம் கரதல கரப்ருஷ்டாப்யாம் பட்.

### அங்கநியாசம்

ஓம் ஓம் ஹ்ருதயாய நம:
ஓம் ரூம் சிரஸே ஸ்வாஹா
ஓம் க்ஷௌம் சிகாயை வௌஷட்
ஓம் ஹூம் கவசாய ஹூம்
ஓம் யூம் நேத்ரத்ரயாய வௌஷட்
ஓம் ஔம் அஸ்த்ராய பட்

### தியானம்

பாலார்க்காயுத தேஜஸம் த்ருதஜடா ஜூடேந்து கண்டோஜ்வலம்
நாகேந்த்ரை: க்ருதசேகரம் ஜபவடீம் சூலம் கபாலம் கரை: ।
கட்வாங்கம் தததம் த்ரிணேத்ர விலஸத் பஞ்சாநநம் சுந்தரம்
வ்யாக்ர த்வக்யாரதாரீ மப்ஜ நிலயம் ஸ்ரீநீலகண்டம் பஜே ।

பதினாயிரம் இளஞ்சூரிய ஒளிபொருந்தியும், சடையில் சந்திர கலையால் பிரகாசிப்பவரும் பாம்புகளைத் தலையில் அணிந்தும், ஜப மாலை, சூலம், கபாலம் கட்வாங்கம் என்ற ஆயுதங்களைக் கைகளில் தாங்கிக்கொண்டும், மூன்று கண்களுடன் ஐந்து முகங்களைக்கொண்டு அழகாயும் புலித்தோலை உடுத்திக்கொண்டும், தாமரையில் இருந்து கொண்டுமிருக்கிற ஸ்ரீ நீலகண்டரைத் தியானிக்கிறேன்.

### பன்னிரண்டுமுக ருத்திராக்ஷம்

இது சூரியஸ்வரூபமேயாகும். 32 பன்னிரண்டு முக ருத்திராக்ஷங்களைத் கழுத்தில் அணிவதால் பசுவதம், மனிதர்களைக்கொல்லுதல், தனம், ரத்தினங்களைத் திருடுதல் முதலிய பாபங்கள் தானே சாந்தமாய்விடுகின்றன. இம்மணிகளில் கோடிக்கணக்கான சூரியர்கள் வசிக்கிறார்கள். ஆக இதன் மாலையைத் தரிப்பவர்களுக்கு நெருப்புச் சுடும் பயமும் இன்னும் பலவித வியாதி பயமும் ஏற்படா. யானை, குதிரை மான் எருமை பன்றி நாய் நரி முதலிய காட்டு மிருகங்களால் எந்தவித தொந்தரவும் ஏற்படாது. இதன் மாலையால் ஓம் ஹ்ரீம் க்ஷௌம் க்ருணி : ச்ரீம் என்ற மந்திரத்தை ஜபம் செய்தால் பெருந்தனம் கிட்டும். அணிபவருக்கு ஏழ்மை முதலியவை ஒருக்காலும் ஏற்படாது. அவர் தன தான்யங்களுடன் நிரம்பியிருப்பர். பாக்கியத்துக்கு அறிகுறி இந்த ருத்ராக்ஷமாகும்.

### அணியும் முறை

ஓம் ச்ரீம் க்ஷௌம் க்ருணி: ச்ரீம் என்பது மந்திரம்.

அஸ்யஸ்ரீ சூர்ய மந்த்ரஸ்ய பார்கவ ரிஷி : காயத்ரீ சந்த : | விச்வேச்வரோ தேவதா ஹ்ரீம் பீஜம் | ச்ரீம் சக்தி : க்ருணி : கீலகம் | ருத்ராக்ஷதாரணார்த்தே ஜபேவிநியோக : பார்கவரிஷயே நம : சிரஸி காயத்ரீ சந்தஸே நமோமுகே | விச்வேச்வரதேவதாயை நமோஹ்ருதி | ஹ்ரீம் பீஜாய நமோ குஹ்யே | ச்ரீம் சக்தயே நம : பாதயோ : |

### கரநியாசம்

ஓம் ஓம் ச்ரீம் அங்குஷ்டாப்யாம் நம : | ஓம் ஹ்ரீம் ச்ரீம் தர்ஜநீப்யாம் ஸ்வாஹா | ஓம் க்ஷௌம் ச்ரீம் மத்யமாப்யாம் வஷட் | ஓம் கம் ச்ரீம் அநாமிகாப்யாம் ஹூம் | ஓம் க்ருணி : ச்ரீம் கநிஷ்டிகாப்யாம் வௌஷட் | ஓம் ஹ்ரீம் க்ஷௌம் க்ருணி : ச்ரீம் கரதலகரப்ருஷ்டாப்யாம் பட்.

### அங்கநியாசம்

ஓம் ஓம் ச்ரீம் ஹ்ருதயாய நம : | ஓம் ஹ்ரீம் ச்ரீம் சிரஸே ஸ்வாஹா | ஓம் க்ஷௌம் ச்ரீம் சிகாயை வஷட் | ஓம் கம் ச்ரீம் கவசாய ஹூம் | ஓம் ணிம் ச்ரீம் நேத்ரத்ரயாயவௌஷட் | ஓம் ஹ்ரீம் க்ஷௌம் க்ருணி : ச்ரீம் அஸ்த்ராய பட் |

### தியானம்

சோணும் போருக ஸம்ஸ்திதம் த்ரிநயநம் வேதத்ரயீ விக்ரகம், தானும் போஜ யுகாபயாநி தததம் ஹஸ்தை: ப்ரவாலப்ரபம், கேயூராங் கத கங்கண த்வயதரம் கர்ணே வஸத்குண்டலம், லோகோத்பத்தி விநாசபால நகரம் சூர்யம் குணப்திம் பஜே.

செந்தாமரையிலிருப்பவரும் முக்கண்ணரும் மூன்று வேதங்கள் உருவமாயும், வரம், இருதாமரை, அபயம் இவைகளைக் கைகளால் தாங்கிக்கொண்டும் பவழம்போல் காந்தி பொருந்தியும் தோள்வளைகளையும் கங்கணங்களையும் அணிந்துகொண்டும் காதில் விளங்கும் குண்டலங்களோடும் கூடியவரும் உலகத்தின் தோற்றம், காத்தல், அழித்தல் இவைகளைச் செய்பவரும் குணங்களின் கடலாயும் உள்ள சூரியனைப் பூஜிக்கிறேன்.

( தொடரும் )

# சிவ பஞ்சாக்கரத் துதி

கோவை,
## தேவிதாசன், திரு. ஐ. கோ. இராமநாதன்

கொச்சகக்கலிப்பா

1. நறையாரும் நறுங்கொன்றை நதிநங்கை நன்முகம்
பிறையாரும் சடையானைப் பிறவாத உடலானைக்
கறையாரும் மிடற்றானைக் கயிலாயத் திடத்தானை
மறையார்மால் அறியார்கண் ணுதலானை வாழ்த்துவெனே.

1. கு-ரை:- நறையாரும் - தேன் நிறைந்த. நதிநங்கை - கங்கை. பிறை - பிறைச்சந்திரன். ஆரும் - கொன்றை, கங்கை, பாம்பு, சந்திரன் இவை தங்கிய. பிறவாத உடலான் - உடலெடுத்துப் பிறவாத பரம்பொருள். கறை - ஆலகாலவிடம். மிடறு - கழுத்து. மறையார் - பிரமன். மால் - விட்டுணு. கண்ணுதலான் - நெற்றிக் கண்ணுடையவன்.

2. மங்கைபங்கி னுடையானை விடையானை மான்மழுவம்
அங்கியங்கை கொண்டானை அஞ்செழுத்தாய் நின்றானைக்
கொங்கலர்வேட் காய்ந்தானைக் கூற்றமுதைத் தானைநடம்
செம்பொன்மன்றி னுகந்தானைச் சிவனையே நினைநெஞ்சே.

2. கு-ரை:- மங்கை - உமாதேவி. விடையான் - காளையை ஊர்தியாக உடையவன். மழுவம் - மழு என்ற ஆயுதம். அங்கி - நெருப்பு. அங்கை - அழகிய கை. கொங்கலர் - தேன்நிறைந்தமலர். வேள் - மன்மதன். காய்ந்தானை - எரித்தவனை. கூற்றம் - யமன். நடம்-நடனம், கூத்து. செம்பொன் மன்று-கனகசபை, உகந்தான்-மகிழ்ந்தவன்.

3. சிவனென்னும் பேர்தனக்கே உரியான்செம் மேனியனைச்
சிவனித்தென் னாட்டிற்கெந் நாட்டவர்க்கும் இறைவனைச்
சிவாயநம என்பாரை அபாயமின்றிக் காப்பானைச்
சிவபெருமா னைச்சேர்வார் சிவமேயாய்த் திகழ்வாரே.

3. கு-ரை:- "சிவனெனு நாமம் தனக்கே உடைய செம்மேனி எம்மான்" அப்பர் "தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" திருவாசகம். "சிவாய நம வென்று

சிந்தித்திருப்போர்க்கு அபாயமொருநாளும் இல்லை" ஔவையார். சேர்வார் - இடைவிடாது நினைப்பவர். 'மலர்மிசை ஏகினான்' என்ற குறளில் பரிமேலழகர் கூறும் உரைகாண்க.

**4. வாள்வரியை மதகரியை உரித்தானை வல்லரக்கன்**
**தோள்முரிய நெரித்தானைத் தொல்புரமூன் றெரித்தானைக்**
**கீளரையில் வரித்தானைக் கிளர்நீறு தரித்தானை**
**நாளுநமச் சிவாயவென நவின்றேத்தாய் நன்னெஞ்சே.**

4. கு - ரை :- வாள்வரி - வேங்கைப்புலி. மதகரி - மதயானை. அரக்கன் - இராவணன். கீள் - கோவணம். கிளர் - ஒளிரும். நவின்று - செபித்து.

**5: யகரம்போற் சூல்துடிக்கை நகுதலைகை ஏந்தினனை**
**அகிலவுல குயிராய்வே றுயுடனு மானானை**
**அகரமுதல் னகரவரை அமைமும்மைத் தமிழானைத்**
**திகழுயர்பே றருள்சிவனைத் தேனித்தார் வாழ்வாரே.**

5. கு - ரை :- யகரம்போற் சூலேந்தும் : பாம்பன் சுவாமிகள் சண்முக கவசம். சூல் - சூலாயுதம். துடிகை - துடி, உடுக்கை. நகுதலை - பிரமகபாலம். "தானாய் வேறாய் உடனானான்" சம்பந்தர் தேவாரம். "அவையே தானே ஆய்" சிவஞானபோதம். "உலகெலாமாகி வேறாயும் உடனுமாய்" சிவஞான சித்தியார். அமை - அமைந்த, அழகிய. மும்மைத் தமிழ் - இயல், இசை, நாடகத் தமிழ். தேனித்தார் - தியானிப்பவர்கள்.

---

குருமணியின் அருளாசிகவிலிருந்து திரட்டிய

அருள் ஞானக் கொடை

## மறதி ஏன்?

மனிதனின் எண்ணம் வருங்காலத்தைப்பற்றியதாகவே அமைதல் வேண்டும். கடந்தகாலத்தில் தான் வாழ்ந்த சிறப்புக்களை எண்ணிக் கொண்டே இருப்பதாலோ, துன்பங்களை எண்ணி வருந்திக்கொண்டிருப்பதாலோ பயனில்லை. ஓரளவு கடந்தகால அனுபவங்கள் எதிர்கால வாழ்வுக்குத் துணைசெய்யும். எதிர்கால சிந்தனையே மனிதனை ஈடேற்றவல்லது. கடந்தகால இன்பத்துன்ப நிகழ்ச்சிகளை மறக்க மறதி என்ற பண்பை இறைவன் மனிதனுக்கு அளித்துள்ளான். மனிதன் நல்லவண்ணம் வாழ மறதி உதவுகிறது. — இரா. செ.

உ

சிவமயம்

# ஆயில்யத்திருநாள் ஆலய வழிபாடு

தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ **சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்** தமது குருமூர்த்திகள் காட்டியருளிய வழியிலேயே தமது ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாளில் பாடல்பெற்ற தலங்கள் தோறும் முறையான வழிபாட்டிற்கு வழிகாட்டிவருகின்றார்கள். காவிரித் தென்கரைத்தலங்களில் ஆயில்யத்திருநாள் வழிபாடு நடைபெறுகிறது. உழவாரப்பணி, விசேட அபிடேக ஆராதனைகள், தலத் திருப்பதிகங்களை அச்சிட்டு ஓதி வழங்குதல், சமயப் பிரசாரம் முதலியன ஆயில்யத் திருநாள் வழிபாட்டின் அங்கங்களாகும்.

நிகழும் காளயுக்தி ஆண்டு ஆடித்திங்கள் 19-ஆம் நாள் (4—8—1978) வெள்ளிக்கிழமை காலை 10-மணி அளவில் மூவர்திருப்பதிகங்களும்பெற்ற திருச்சோற்றுத்துறை அருள்மிகு தொலையாச்செல்வர் திருக்கோயிலிலும், மாலை 6-மணியளவில் சம்பந்தர் நாவுக்கரசர் இவ்விருவரது திருப்பதிகங்கள் பெற்ற திருவேதிகுடி அருள்மிகு வேதபுரீசுவரர் திருக்கோயிலிலும் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் ஆயில்யத் திருநாள் சிறப்பு வழிபாடுகள் நடைபெறும்.

அன்பர்கள் அனைவரும் வருக! வழிபட்டு உய்க! அரன் அருள் பெறுக.

# செய்திகள்

## ஆயில்யத்திருநாள் ஆலய வழிபாடு

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் ஜன்ம நக்ஷத்திரமாகிய ஆயில்யத்திருநாள் ஆலய வழிபாடு 8—7—78 சனிக்கிழமை காலை திருப்பூந்துருத்தியிலும், மாலை திருக்கண்டியூரிலும் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. திருவையாறு, விளாங்குடி, வல்லம், ஏலத்தூர் வார வழிபாட்டுக் கழக அன்பர்களும் அடியார்கள் பலரும் கலந்துகொண்டு வழிபாடியற்றினர்.

8—7—78 காலை 7 மணியளவில் திருவையாறு ஆட்கொண்டார் சந்நிதியிலிருந்து அன்பர்கள் சிவபுராண பாராயணத்துடன் பாத யாத்திரையாகத் திருப்பூந்துருத்திக்குப் புறப்பட்டனர். திருப்பூந்துருத்தியின் ஊர் எல்லையில் திரு. இராதாகிருஷ்ண காடேராவ்சாகேப் அவர்கள் அன்பர்கள் அனைவரையும் வரவேற்றார்கள். ஊர் தோரணங்களால் அலங்கரிக்கப்பெற்றிருந்தது. அன்பர்கள் திருவங்கமாலை முதலிய திருப்பதிகப் பாராயணங்களுடன் வீதி வலம் வந்து திருக்கோயிலை அடைந்தனர். கோயில் வாயிலில் பூரணகும்ப மரியாதைகளுடன் இறைபணியாளர் அனைவரையும் வரவேற்றார். அன்பர்கள் உழவாரப்பணி தொடங்கினர். காலை 10 மணி அளவில் அபிஷேக ஆராதனைகள் தொடங்கி நிகழ்ந்தன. அச்சிடப்பெற்ற தலத்திருப்பதிகம் வெளியிடப்பெற்று அன்பர்கள் அனைவராலும் ஓதப்பெற்றது. திரு. M. இராதாகிருஷ்ண காடேராவ் சாகேப் அவர்கள் தலைமையில் திருவையாறு வித்துவான். திரு. சுவர்ணகாளேஸ்வரன் அவர்களும் தருமையாதீனத் தமிழ்ப்புலவர். வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ. அவர்களும் சொற்பொழிவாற்றினர். 1 மணி அளவில் ஸ்ரீ அப்பர் சுவாமிகள் திருமடத்தில் வழிபாடும் அறுசுவை உண்டியோடு மகேஸ்வரபூசையும் நிகழ்ந்தன.

மாலை 4 மணி அளவில் அடியார்கள் பாதயாத்திரையாகத் திருக்கண்டியூர் புறப்பட்டனர். கோயில் இறைபணியாளர் அனைவரையும் வரவேற்றார். மாலை 6 மணி அளவில் திருக்கண்டியூரில் அபிஷேக ஆராதனைகள் நிகழ்ந்தன. தலத்திருப்பதிகம் அன்பர்கள் அனைவராலும் ஓதப்பெற்றது. இரவு 7 மணி அளவில் திருவையாறு திரு. எம். இராமச்சந்திரன் பி. ஏ., பி. எல். அவர்கள் தலைமையில் திருப்பழனம் புலவர். திரு. ஆபத்சகாயம் அவர்களும், தருமபுரம் புலவர்.

திரு. இரா. செல்வக்கணபதி எம். ஏ. அவர்களும் சொற்பொழிவாற்றினர். திருவையாறு செய்தியாளர் திரு. வேங்கடராமச் செட்டியார் அவர்கள் அன்பர்களை வரவேற்றார். திருவையாறு திருக்கோயில் கண்காணிப்பாளர் திரு. கிருஷ்ணமூர்த்தி முதலியார் அவர்கள் நன்றியுரை கூறினர்.

## புதுவை அமைச்சர் வருகை

புதுவைமாநிலம் அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு. இராமச்சந்திரன் அவர்கள் 2—7—78 ஞாயிறன்று தருமையாதீனத்திற்கு வருகைபுரிந்தனர். திருநள்ளாறு தேவஸ்தானம் கட்டளை விசாரணை வித்துவான் ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் அமைச்சருக்கு மாலை சூட்டி வரவேற்றார்கள். அமைச்சர் அவர்கள் ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலட்சுமி துர்க்காதேவியை வழிபட்டார்கள். ஆதீன நூல்நிலையம் முதலியவற்றைக்கண்டுகளித்து, ஸ்ரீ சொக்கநாதப் பெருமான் பூஜையையும் தரிசித்து வழிபட்டார்கள். பூஜைமுடிவில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அமைச்சருக்குப் பொன்னுடை போர்த்தி திருநீற்றுப் பிரசாதம் வழங்கி ஆசியருளினார்கள், பிறகு பண்டாரக்கட்டில் அமைச்சர் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களைத் தரிசித்தபோது, ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அறநிலையங்களின் ஆக்கங்கருதி அமைச்சருக்கு ஆலோசனை அருளினார்கள்.

### தருமையாதீனத்தில்

## மாணிக்கவாசக சுவாமிகள் குருபூஜை

தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில், சைவசமயாசாரியருள் நான்காமவராகிய ஸ்ரீ மாணிக்கவாசகசுவாமிகளுக்கு ஆனித் திங்கள் 25-ஆம் நாள் (9—7—1978) ஞாயிற்றுக்கிழமையன்று விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. காலை ஸ்ரீ சொக்கநாதப்பெருமான் சந்நிதியில் ஆதீனத் திருக்கூட்டத்து அடியார்களும் ஆதீன ஓதுவாமூர்த்திகளும் திருவாசக பாராயணம் செய்தார்கள். மாலை 6-மணி அளவில் வித்துவான். திரு. மு. ஆறுமுக தேசிகர் மணிவாசகர் வரலாறு பற்றியும், வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ. திருவாசகத்தைப்பற்றியும், வித்துவான். திரு. மு. சிவச்சந்திரன் எம். ஏ. திருக்கோவையாரைப்பற்றியும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். ஆதீனத் தேவாரப்பாடசாலை மாணவர்களும் ஆதீன ஓதுவாமூர்த்திகளும் சிவபுராணம் ஓதிவர ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் திருவுலாக்காட்சி நடைபெற்றது. ஸ்ரீ நடராசப்பெருமான் சந்நிதியை அடைந்ததும் அச்சோப்பதிகம் ஓத., தீபாராதனையுடன் விழா இனிது முடிந்தது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்

எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்களுக்கு அருட்பிரசாதம் வழங்கியருளினார்கள்.

## சம்வத்ஸராபிஷேகம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான வைத்தீசுவரன்கோயில் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் 2—7—69 இல் நிகழ்ந்த அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகத்தை முன்னிட்டு ஆண்டுதோறும் நடைபெற்றுவரும் சம்வத்ஸராபிஷேகம் 24—6—78 சனிக்கிழமை திருவோணநக்ஷத்திரம் கூடிய நன்னாளில் நடைபெற்றது. காலையில் வேதபாராயணம், திருமுறைப்பாராயணம், ருத்திரஜபம் முதலியன நிகழ அபிஷேகமும், மாலையில் எல்லாமூர்த்திகளுக்கும் சகஸ்ரநாம அருச்சனைகளும் நிகழ்ந்தன. மண்டப தீபாராதனையின்போது அன்பர்கள் திரளாக வந்து தரிசனம் செய்தார்கள்.

## சென்னை.. தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில்

**நாயன்மார்கள் குருபூஜைகள் :**

கழற்சிங்கர், நம்பியாண்டார்நம்பி, சோமாசிமாறர், ஏயர்கோன் கலிக்காமர் இவர்கள் குருபூஜைகள் முறையே 3—6—78, 8—6—78, 11—6—78, 28—6—78 தேதிகளிலும், நமிநந்தியடிகள், சேக்கிழார் இவர்கள் குருபூஜைகள் 9—6—78 தேதியிலும் நிலைய பூஜைமடத்தில் நடைபெற்றது. திரு V. N. ஆறுமுக முதலியார் அவர்கள் பெரிய புராணம் வாசித்து விளக்கம் செய்தார்கள். ஸ்ரீ அப்பர்குருகுல மாணவர்களும், நிலைய அன்பர்களும் கேட்டுப்பயனடைந்தனர். எல்லோருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.

**கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா :**

இவ்விழா 5—6—78 திங்கட்கிழமை மாலை 7-00மணிக்கு நிலைய மன்றத்தில் நடைபெற்றது. விழாவிற்குத் திருப்பனந்தாள் ஸ்ரீமத் காசிவாசி சுவாமிகள் தலைமைவகித்தார்கள். ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி படத்திற்கு அர்ச்சனை செய்தபிறகு புலவர் திரு. N. இராமலிங்கம் அவர்களும், திரு. N. இராமமூர்த்தி ஐயர் அவர்களும் வேளூர்ப் பதிகங்களையும், முருகன் நாமாவளிகளையும் பாடினார்கள்.

விழாவிற்குத் தலைமை வகித்த ஸ்ரீமத் காசிவாசி சுவாமிகள் அறிவுரை வழங்குகையில். 'தருமமிகு சென்னை' என்று வள்ளலார் கூறியபடி சென்னையில் உள்ளவர்கள் தருமமிகுந்தவர்கள். ஆதலால் புள்ளிருக்குவேளூர் இறைவன், சென்னையில் உள்ளவர்கள் மீது

இரக்கம் கொண்டு தன்னுடை அருளை, விபூதியாக-சந்தனக்குழம்பாக-திருச்சாந்துருண்டையாகத் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள்மூலம் மாதந்தோறும் சென்னையில் தவருது கிடைக்கும்படிச் செய்கின்ருன். பொதுமக்கள் திருக்கோயிலை நாடிச்சென்று இறைவனை வழிபடுகின்ருர்கள். இறைவனே அடியவர்களைத் தேடிச்சென்று அவர்களுடைய மனத்தையே கோயிலாகக்கொண்டு அருள் வழங்குகின்ருன். காசிமடத்தைத் தோற்றுவித்த ஸ்ரீ குமரகுருபரர் தருமையாதீனத்தின் நான்காவது குருமகாசந்நிதானமாக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணித் தேசிக பரமாசாரிய சுவாமிகளிடம் வாக்குத்தடைப்பட அவர்களையே குருவாகக் கொண்டு, குருவின் கட்டளைக்கேற்பக் காசி வரை செல்ல முடியாது என்று எண்ணி, சிதம்பரம்வரை யாத்திரையாகச் செல்லுகையில் வைத்தீசுவரன் கோயில் வழியாகச் செல்லும் போது, ஸ்ரீ செல்வ முத்துக்குமார சுவாமி, குருக்கள் வடிவில்வந்து பிரசாதம் வழங்கி, தன்மீது பிள்ளைத்தமிழ் பாடும்படிச்செய்ய, ஸ்ரீ குமர குருபரர் முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் பாடிமுடித்தார். கந்த புராணத்தின் சுருக்கமாக - குட்டிக் கந்தபுராணமாக, கந்தர்கலி வெண்பா பாடியுள்ளார். செல்வமுத்துக்குமார சுவாமிக்கு அபிஷேகம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் முன்போ அல்லது அவர்கள் உத்தரவு பெற்ற அடியவர்கள் முன்போ தான் நடைபெறும். ஆதீன அடியவர் இல்லாமல் ஸ்ரீ முத்தையா வீதி வலம்வருவதில்லை. ஸ்ரீ முத்தையாவுக்கு தண்டுபோட்டு கயிறு சாத்தும்போதும் வெளியில் புறப்பாடு ஆகும் போதும் கட்டளை சுவாமிகள் உடன் இருந்தே ஆகவேண்டும். இந்த மரபு வேறு எங்கும் இருக்காது. நிர்வாண தீட்சை பெற்றவர்களுக்கும் குருமகாசந்நிதானம் அவர்களுக்குந்தான் இலை விபூதி சந்நிதிகளில் கொடுப்பது வழக்கம். ஆனல் அர்த்தசாமம் புழுகாப்பு தெரிசனம் முடிந்தவுடன் விபூதி இலையில் வைத்துக் கொடுப்பதில்லை. குருக்கள் கையில் விபூதி கொடுப்பார். ஸ்ரீ முத்தையாவே நேரில்வந்து கொடுப்பதாக ஐதீகம் என்ற கருத்துக்களைக் குறிப்பிட்டார்கள்.

திரு. K. V. கமலநாபன் அவர்கள் ஸ்ரீமத் காசிவாசி சுவாமிகள் இங்கு மேடையிலமர்ந்திருப்பது வேளூர் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமியே இங்கு அமர்ந்திருப்பது போலத்தோன்றுகிறது. காரணம் ஸ்ரீ முத்தையா் திருநாமத்தையே ஸ்ரீமத் காசிவாசி சுவாமிகள் தாங்கி இருக்கிருர்கள். இவர்கள் அன்பும் பண்பும் நிறைந்தவர்கள். காசிமுதல் இராமேசுவரம் வரை பல தருமங்களைச் செய்தவர்கள் என்று சிறப்பாகப்பேசினுர்கள்.

விழாவில் பேசிய தேன்மொழியார் முருகனின் பெருமைகளைத் திருமுருகாற்றுப்படை,கந்தபுராணம் ஆகியவைகளிலிருந்து மேற்கோள் காட்டி விளக்கினுர்கள்.

**மாதாந்தர சமயப் பிரசார வழிபாடு:**

1978 ஜூன் மாத சமயப்பிரசார வழிபாடு 25—6—78 ஞாயிற்றுக்கிழமை மாலை 4-25 மணியிலிருந்து இரவு 9-00 மணி வரை சென்னை நுங்கம்பாக்கத்திலுள்ள ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத ஸ்ரீ அகஸ்தீஸ்வரர் ஆலத்தில் சிறப்பாக நடைபெற்றது. எல்லா மூர்த்திகளுக்கும் விசேஷ அபிஷக ஆராதனைகள் செய்யப்பட்டன. வழிபாட்டின்போது மேற்படி கோயில் ஓதுவாரும், மைலாப்பூர் திரு. நாகநாத ஓதுவாரும் திருமுறைப் பாராயணம் செய்தனர். திருவாரூர் திரு. மகாலிங்கக் குருக்கள் தோத்திரப் பாடல்களையும் நாமாவளிகளையும் பாடினர்.

வழிபாட்டிற்குப் பிறகு சமயப்பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. திரு. R. சிவஞானம் செட்டியார் அவர்கள் தமது வரவேற்பில் இன்று வழிபாடு மனத்தை உருக்கும் நிலையில் அமைந்தது. அதனுல் நம்மை நாமே மெய்ம்மறந்து ஒருநெறிய மனம் வைத்து உணரும் பெருநிலையில் ஈடுபட முடிந்தது. உயிர்கள் உய்வதற்கு வழிபாடே மேலாம் நன்னெறி என்று குறிப்பிட்டார்கள்.

அடுத்துப்பேசிய திருவாரூர் திரு. மகாலிங்கக் குருக்கள் சைவ சமயாசாரியர்களால் பாடப்பெற்ற தேவாரத் திருமுறைகள் வேதத் திற்குச் சமம் என்பதை விளக்கிப் பேசினுர்கள்.

பின்னர்ப்பேசிய புளிச்சம்பள்ளம் திரு. சுப்பிரமணிய சிவாச் சாரியார் இவ்வழிபாட்டில் கலந்துகொண்டது பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன். வேதாரண்யம் வழிபாட்டில் கார் செல்ல முடியாதபடி முழங்கால் அளவு தண்ணீர் ஓடியபோது நான் உடனிருந்து வழி காட்டினேன். அன்பர்களின் அன்புமிகுதியால் எவ்வித இடையூறும் வராமல் வழிபாடு சிறப்பாக நடந்தது. இப்பொழுதிருக்கும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் தலைமையில் அப்போது வழிபாட்டு யாத்திரை சிறப்பாகநடந்தது. அவர்கள் ஆற்றியருளிய வழிபாட்டைப் பின்பற்றி இப்பொழுதும் வழிபாடு சிறப்பாக நடைபெறுவது தமிழ் மக்கள் செய்த தவமே' என்று சொல்லி, புளிச்சம்பள்ளியில் 21-8-78 தேதி நடைபெறவிருக்கும் கும்பாபிஷேகத்திலும் கலந்து கொள்ள வேண்டும் என்று அன்பர்களைக் கேட்டுக்கொண்டார்கள்.

கடைசியாக நிலைய சுவாமிகள் எல்லோர்க்கும் நன்றி கூறக் கூட்டம் நிறைவுற்றது.

# எதிர்காலம்

## ஜோதிஷம், திரு. ந. இராசமாணிக்கம்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

( காளயுக்தி௵ ஆடி௴ 1௳ முதல் 31௳ முடிய )

( 17—7—78 முதல் 16—8—78 முடிய )

ஸ்ரீ காளயுக்தி௵ ஆனி௴ 32 ஆம் தேதி பானுவாரம் அனுஷ நக்ஷத்திரம் பவகரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 37 நாழிகை 50 விநாடிக்குக் கும்ப லக்னத்தில் ஸ்ரீ லோகரட்சகரான சூரியபகவான் மிதுன ராசியிலிருந்து கடகராசி சங்கிரமணமாக ஆடிமாதப் பிரவேசம் செய்கின்றார். அன்று தக்ஷிணாயன புண்ய காலமாகும். மறுதினம் சோமவாரம் ஆடிமாதம் முதல்தேதியாகிறது. சங்கிரம வாராதிபதி சூரியன் சஸ்யாதிபதியாகிறார். அதனால் உலகத்தில் புன்செய் பயிர்களாகிய கோதுமை, பார்லி, பூண்டு, கடலை, கொள்ளு முதலியவற்றின் விருத்தி அதிகரிக்கும். தேசங்களில் எங்கும் தேசத் தலைவர்களின் சிறந்த நடுவு நிலைமை பரிபாலனத்தினால் பிரஜைகள் நலம்பல பெற்றுய்வார்கள்.

உலகில் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் உள்ள ஞானகுருமகான்களின் ஞானப்பிரகாசத்தில் அனுக்கிரகமாகி தீட்சை பெற்ற தம்பிரான் சுவாமிகள் சிவாசாரியார்கள் உலகமெங்கும் சிவ சமய போதனைகள்செய்து சிவாசாரங்களைப் பரவச்செய்துவருவார்ககள். தேவாலயங்களில் தெய்வ பூசனைகள் நியமத்துடன் சிறப்பாக நடைபெற்றுவரும். உலகமக்கள் எல்லோரும் தெய்வீகப்பண்புடன் நல் வாழ்க்கை நடத்துவர்.

## குருபெயர்ச்சி

ஸ்ரீ காளயுக்தி௵ ஆடி௴ 15௳ திங்கட்கிழமை உதயாதி 12 நாழிகை 20 விநாடிக்குப் பிரகஸ்பதி என்கிற குரு மிதுனராசியிலிருந்து தனது உச்சஸ்தானமாகிய கடகத்தில் பிரவேசிக்கிறார். அதனால் லோகத்தில் எல்லா இராசியையுடையோருக்கும் அவரது கடாக்ஷம் இருந்துவரும். இராசிகளுக்குப் சுபபலஸ்தானமாக அவரவரின் மிகவும் உயர்வான நற்பலன்களையும் அசுபபலஸ்தானமாக

அவர் வரின் தீமை அதிகம் ஏற்படாத நிலைமையையும் அவர் தன்மையால் ஆதிபத்தியாதிகளில் அனுக்கிரகம் செய்துவருவார். அதாவது மிதுனம் கன்னி விருச்சிகம் மகரம் மீனம் இந்த இராசிகளுக்குக் குடும்பசுபிட்சம், கல்வி, உத்தியோகம், தொழில்துறைஉயர்வு, தனுதாயம், பிரபல கீர்த்தி, சுப மங்களம், புத்திரபாக்கியம் ஆகிய விசேஷ பலன்களை அளித்துவருவார்.

மேஷம், ரிஷபம், கடகம், சிங்கம், துலாம், தனுசு, கும்பம் ஆகிய இராசிகளுக்கு இக்கட்டான நிலைமையினின்று விடுபடுதல், சுபிட்சமான இஷ்டத்திற்கு மாறுதல், காரியங்களில் அசட்டையினும் நேர்ந்த பாதகங்களில் அதிகம் பாதிப்பு வராதிருத்தல், தெய்வீகமானவர்களிடம் புனிதப் பிரசாதம் பெறுதல், விவகாரங்களில் பாதிப்பு ஏற்படாமல் இருத்தல் ஆகிய ஆதரவுபலன்களை அளித்துவருவார்.

எல்லா இராசியையுடையோரும் குருவாரத்தில் தேவாலயம் சென்று அருள்மிகு. தட்சிணாமூர்த்தி சுவாமிக்கு அபிஷேக ஆராதனைகள் செய்து வழிபட்டு, வேதம் ஓதுவோருக்குப் பொன் வஸ்திரம் தானம் செய்துவரப் பிரபுத்துவம், ஞானம், தெய்வப்பொலிவு ஆகிய திருவுண்டாகும்.

**1. மேஷம் :- அசுவதி - பரணி - கார்த்திகை ¼**

**( சு. சே. சோ. லா. - லி. லூ. லே. லோ. - அ. )**

மேஷ ராசி 9 பாதங்களும் சுபபலனை நடக்கும். தனச்செலாவணி சரளமாக இருந்துவரும். சகோதரர் சௌக்கியம் நன்முக இருந்துவரும். வியாபாராதிகளில் கலைத்துறையில் முதலீடு செய்யும். லோகோபகாரமான நற்காரியங்களில் ஈடுபடுத்தும். பூமியில் இயந்திர சாதனங்களில் அபிவிருத்திபலன் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். 9 தேதிகளான பிறகு வழக்கு விவகாரங்களில் ஜெயப்பிராப்தியாகும். தார புத்திரர்களுக்குச் சௌக்கியம் தரும். செய்தொழிலில் அலுவல்கள் திறம்பட நடந்துவரும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

**2. ரிஷபம் :- கார்த்திகை ¾ - உரோகிணி - மிருகசீர்ஷம் ½**

**( இ. ஊ. ஏ. - ஒ. வ. வி. வூ - வே. வோ. )**

ரிஷபராசி 9 பாதங்களும் சுமார் பலனை நடக்கும். குடும்பத்தில் தன வரவுகள் வந்துகொண்டிருக்கும். இளைய சகோதரருக்கு நலம் தரும். மூத்த சகோதரருக்கு உடல்நலம் பாதித்துக் குணமாகும். இயந்திர வாகனத்தில் ஓர் பழுது ஏற்பட்டுச் சீர்படும். அடிக்கடி வெளியூர் பயணம் ஏற்படும். புத்திரர் புத்திரிகளின் நலனில் மனக் கவலையாக இருப்பினும் தெய்வானுக்கிரகத்தினுல் அவை நீங்கும்.

தாம்பத்திய வாழ்க்கை சாதாரணமாக நடந்துவரும். செய்தொழிலில் மாறுதல் சம்பவிக்கும். சனி ஞாயிறு சுபமாகும்.

**3. மிதுனம் :- மிருகசீர்ஷம் ½ - திருவாதிரை – புனர்பூசம் ¾**
(கா. கி. - கு. க. ங. ச்சா. - கே. கோ. ஹ.)

மிதுன ராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். குடும்பாபிவிருத்தியில் பண வருமானங்கள் கண்யத்துடன் வந்துகொண்டிருக்கும். சகோதரர்கள் நலமுடன் இருந்து வருவர். வித்தியா வியாபாராதி கலைத்துறையில் உயர்வு உண்டாகும். கால் நடை ஜீவனில் முதலீடு செய்தலாகும். விவசாயத்தில் செலவு ஏற்படினும் விருத்தி பலனுக இருந்துவரும். புத்திரர் சௌக்கியம் தார சௌக்கியம் நன்ருக இருந்துவரும். செய்தொழிலில் மேலிடத்திய நன்மைகளும் கௌரவமும் திருப்திகரமாக இருந்துவரும். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

**4. கடகம் :- புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்.**
(ஹி. - ஹு. ஹே. ஹோ. ட. - டி. டு. டே. டோ.)

கடக ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பத்தில் தன வரவுகள் கெடியான தோரணைக்கு ஏற்ப வந்துகொண்டிருக்கும். சகோதரருக்குச் சௌக்கியம்தரும். 9-ம்தேதிமுதல் பூமி இயந்திரங்களில் இஷ்ட சித்தியாக விருத்தி ஏற்படும். கால்நடை ஜீவன்களில் நற்பலன் இருந்துவரும். தீர்த்த யாத்திராபலன் கிடைக்கும். புத்திரனுக்குப் புஜபலம்தரும். விவகாரங்களில் ஜெயம்ஏற்படும். தாம்பத்திய வாழ்க்கை சாதாரணமாக நடந்துவரும். செய்தொழில்கள் திடமாகச் செயல்பட்டுவரும். புதன் வியாழன் சுபமாகும்.

**5. சிம்மம் :- மகம் - பூரம் – உத்திரம் ¼**
(ம. மி. மு. மே. - மோ. ட. டி. டு. - டே.)

சிம்மராசி 9 பாதங்களும் மிச்சிர பலனுக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் தன வரவு செலவுகள் சரி சமனுக இருந்துவரும். சகோதரருக்கு உடல்பலவீனமாகித்தேரும். வியாபாராதி கலைத்துறைகளில் செலவுடன் நற்பலன் தரும். தாய்க்கு மூர்ச்சையினுல் கண்டம் வந்து தப்பும். புத்திரனின் தொழில் துறையில் மாறுதல் ஏற்படும். தாம்பத்திய வாழ்க்கை சாதாரணமாக நடந்துவரும். உடலில் பித்தாதிக்கமாக இருந்து நீங்கும். செய்தொழிலில் மனேவேகத்துக்குரிய பிரச்சினைவரினும் உடன் சரிபடச் செய்யும். வெள்ளி சனி சுபமாகும்.

**6. கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½**
(டோ. பா. பி. - பு. ஷ. ண. ட. - பே. போ.)

கன்யாராசி 9 பாதங்களும் நற்பலன் தரும். குடும்பாபிவிருத்தியில் தனவரவுகள் மூன்று விதத்தில் வந்துகொண்டிருக்கும். இளைய

சகோதரர் நலம் சாதாரணமாக இருந்துவரும். மூத்த சகோதரருக்கு நன்மை மிகுதியாக ஏற்படும். வித்தியா வியாபாராதிகளில் பிரசித்தம் தரும். புத்திரர் புத்திரிகளுக்கு நற்பலன் உண்டாகும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். செய்தொழில் பிரபலமாக நடந்துவரும். மேலிடத்தில் நன்மைகள் இருந்துகொண்டிருக்கும். சனி ஞாயிறு சுபமாகும்.

**7. துலாம் :- சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾**

**( ர. ரி. - ரு. ரே. ரோ. தா. - தி. து. தே. )**

துலாராசி 9 பாதங்களும் இம்மாதம் சௌக்கிய பலன் தரும். பலவிதத்தில் தனதாயங்கள் ஏற்படும். வித்தியா வியாபாராதி கலைத் துறைகள் பிரபல்யத்துடன் விளங்கும். இராஜ காரியங்களில் நன் மதிப்பு ஏற்படும். பூர்வப் பொருளினின்றும் நற்பலன்கள் வந்து கொண்டிருக்கும். இல்லற தர்மங்கள் சம்பிரதாய விசேஷங்கள் கௌரவ மேன்மையில் சிறப்பாக நடக்கும். தாரபுத்திரர்கள் சௌக்கிய மாக இருந்துவருவார்கள். செய்தொழில்கள் பிரசித்தமாக நடந்து வரும். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

**8. விருச்சிகம் :- விசாகம் ¼ அனுஷம் – கேட்டை.**

**( தோ. - ந. நி. நு. நே. - நோ. ய. யி. யு. )**

விருச்சிகராசி 9 பாதங்களும் பாக்கியவிருத்தியை உண்டுபண் ணும். சகோதரருக்கு நன்மையைத்தரும். எல்லா விஷயங்களிலும் நன்மைகள் கைகூடிவரும். பூமியில் இயந்திர சாதனங்களில் அபி விருத்தி பலன் ஏற்படும். வாகன சுகம் திருப்தியளிக்கும். தந்தையின் உடல்நலம் பாதித்துக் குணமாகும். 9ஆ யளவில் வழக்கு விவகாரங் களில் அனுகூலங்கள் ஏற்படும். தாரபுத்திரர்களின் நலன் நன்றாக இருந்துவரும். செய்தொழிலில் அலுவல்களில் கால தாமதமாயினும் திருத்தமாக நடக்கும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

**9. தனுசு :- மூலம் – பூராடம் – உத்திராடம் ¼**

**( யே. யோ. பா. பி. - பு. த. ப. ட. - பே. )**

தனுர் ராசி 9 பாதங்களும் சுமார் பலனாக நடக்கும். குடும்பாபி விருத்தியில் ஓரளவு வருமானம் வந்துகொண்டிருக்கும். சகோதரர் நலம் சாதாரணமாக இருந்துவரும். தாய்க்கு உடல்நலம் பாதித்துக் குணமாகும். பிதாவிற்கு மேலிடத்திலிருந்து நன்மைகளும் அரசாங்க பிரபலமும் தரும். பூமி இயந்திரங்களில் சாதாரண பலனாக இருந்து வரும். வீடு வாகனாதிகளில் திருத்தங்களும் நன்மைகளும் ஏற்படும். வித்தியா வியாபாராதி கலைத்துறைகளில் நற்பலன் வந்துகொண் டிருக்கும். செய்தொழிலில் காரிய சாதனைகளை ஏற்படுத்தும். சனி ஞாயிறு சுபமாகும்.

**10. மகரம் :- உத்திராடம் ¾ – திருவோணம் –அவிட்டம் ½**

**( போ. ஜ. ஜி. - கி. கு. கே. கோ. - கா. கி. )**

மகரராசி 9 பாதங்களும் மாத முன்பகுதியைவிட, பின்பகுதியில் விசேஷ பலனைத்தரும். பண விஷயத்தில் கௌரவச் செலாவணியை உண்டுபண்ணும். சகோதரருக்குச் சௌகரியங்களைத்தரும். வீடு வாகனாதிகளில் நற்பலன் இருந்துவரும். புத்திரர் புத்திரிகளுக்கு நன்மைகள் ஏற்படும். தாம்பத்திய வாழ்க்கை தெய்வ பக்தியாக நடந்துவரும். சரீரம் வெப்பாதிக்கம் மிகுந்து கண்குத்தல் நரம்புக் கோளாறு போன்றவைவந்து குணமாகும். செய்தொழிலில் அலுவல்கள் நிதானமாக செயல்பட்டுவரும். சந்திராஷ்டமம் நீங்கிய திங்கள் செவ்வாய் சுபமாகும்.

**11. கும்பம் :- அவிட்டம் ½ – சதயம் பூரட்டாதி ¾**

**( கு, கே. - கோ. ஸ. ஸி. ஸு. - சே. சோ. தா. )**

கும்பராசி 9 பாதங்களும் சுமார் பலன் தரும். தன சௌகரியம் போஜன சௌகரியம் மேலாக இருந்துவரும். சகோதரருக்குத் தேக நலிவு ஏற்பட்டுக் குணமாகும். வீடு வாகனாதிகளில் விவாதங்களும் பாகப் பிரிவு பிரச்சினைகளும் வரச்செய்யும் இராசிக்கு ஓர் விபத்து வந்து தப்பும். வித்தியா வியாபாராதிகளில் நற்பலன் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். புத்திரர்களுக்குச் சௌக்கியம்தரும். மனைவிக்குப் பித்தாதிக்கமான நலிவு ஏற்பட்டு உடன் வைத்தியத்தால் குணமாகும். செய்தொழிலில் கைப்பணம் முதலீடு செய்தல் அரசாங்க அனுகூலங்கள் ஏற்படும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

**12. மீனம் :- பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி.**

**( தி. - து. ஸ. ச. தா. - தே. தோ. ச. சி. )**

மீனராசி 9 பாதங்களும் மிச்சிர பலனைக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பண வரவுகள் திருப்திகரமாக வந்துகொண்டிருக்கும். சகோதரருக்குச் சுபம் ஏற்படும். வித்தியாவியாபாராதிகளில் நற்பலன் தரும். நாணய ஒப்பந்தங்களில் அரசாங்கம் அல்லது பந்துக்களால் நிர்ப்பந்தம் உண்டாகும். 15உ முதல் எல்லா விஷயங்களிலும் நன்மைகளை ஏற்படுத்தும். புத்திரர் அல்லது புத்திரிக்கு வெப்பாதிக்க நலிவு தோன்றிக் குணமாகும். மனைவிக்குச் சிரோபாதைவந்து குணமாகும். ஞாயிற்றுக்கிழமை சூரியார்ச்சனை செய்ய நலம் தரும். செய்தொழிலில் மாத பின்பகுதியில் நன்மைகள் ஏற்படும். செவ்வாய் புதன் சுபமாகும்.